Registered as a news paper.

பக்கங்கள் : பன்னிரண்டு

விலை ரூபா 7.00

நமது

# ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு : 2035 கார்த்திகை 10 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ஷவ்வால் 12 (25.11.2004) வியாழக்கிழமை இதழ்:56

விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை

FedEx Express®

இப்பொழுது உலகின் எப்பாகத்திற்கும் விரைவாக பொதிகள், கடிதங்களை அனுப்பிட நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

திருமுருகன் கொம் நெற்

259,கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம். (Opposite All Cylon Distributors) Tel - 021 222 7835 Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் (பலநோக்கு கூ.ச.முன்பாக) Tel - 021 222 7560 Fax - 021 222 7310

### போர்ப் பீதி அதிகரிக்கும் நிலையில்

# சமாதான முயற்சிகளைத் தீவிரப்படுத்த மீண்டும் வருகிறார் எரிக் சொல்ஹெய்ம்!



(ஒஸ்லோ)

இலங்கையில் மீண்டும் போர் மூளலாம் என்ற அச்சநிலை உருவாகியுள்ள சூழலில் – அரசாங்கத்துக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையில் உள்ள வேறுபாடுகளைத் தீர்த்து சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் நோக்கில் நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் அடுத்த மாதம் மீண்டும் இலங்கைக்கு வரவுள்ளதாக நோர்வே அரசுத் தகவல்கள் தெரிவித்தன.

சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் நோக்கில் நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம்– தமது நாட்டு வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் மற்றும் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசனுடன் கடந்த மூன்று வாரங்களுக்கு முன்னர் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார்.

இதன்போது தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனுடனும் ஜனாதிபதி சந்திரிகா உள்ளிட்ட பல்வேறு தரப்பினரையும் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர் எழுச்சி நாட்கள் இன்று உணர்வுபூர்வ ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் நாள் எழுச்சி நிகழ்வுகள் தமிழர் தாயகப் பிரதேசமெங்கும் இன்று உணர்வெழுச்சியுடன் ஆரம்பமாகின்றது. இந்த நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

இன்று ஆரம்பமாகும் மாவீரர் நாள் எழுச்சி நிகழ்வுகள் எதிர்வரும் 27 ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளன. இதனையொட்டி மாவீரர் துயிலும் இல்லங்களில் இன்று காலை 8.00 மணிக்கு தேசியக் கொடி ஏற்றப்பட்டு 27 ஆம் திகதி மாவீரர் நாள் நிகழ்வு முடிவடைந்ததும் இறக்கப்படும்.

பொது நிறுவனங்கள், பாடசாலைகளில் இன்றுமுதல் 27 ஆம் திகதிவரை கடமை முடிந்ததும் பிற்பகல் 12.01 இற்கும், பின்னர் மாலை 6.00 மணிக்கு முன்பாகவும் தேசியக் கொடி இறக்கப்படும்.

கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு, பிரதான சந்திகள், பொது இடங்களில் மாவீரர்களின் புகழ்பாடும் அலங்கார வளைவுகளும், பதாகைகளும் கட்டப்பட்டு நினைவுப் பந்தல்கள் அமைத்தும், மாவீரர்களின் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டுள்ளன. ஒலிபெருக்கிகள் கட்டப்பட்டு எழுச்சி கீதங்கள் இசைக்கப்படுகின்றன.

வர்த்தக நிலையங்கள், பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள், பாடசாலைகள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களில் சிவப்பு மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டு மாவீரர்களின் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்டுள்ளன.

மாவீரர் நாளையொட்டி பொது அமைப்புக்கள் மாவீரர்களின் பெற்றோரைக் கௌரவித்து, மாவீரர்களின் நினைவாக நினைவுப்

## போர்நிறுத்தம் முறிவடைந்தால் பொருளாதாரம் சீர்குலையும்

### உலக வங்கி எச்சரிக்கை



(கொழும்பு)

இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள போர்நிறுத்தம் முறிவடைந்தால் நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்து விடுமென உலக வங்கி எச்சரித்துள்ளது.

உலகவங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட் நேற்று கொழும்பில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலேயே இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்த மாநாட்டில் திறைசேரி செயலர் கலாநிதி பி.பி.ஜயசுந்தரவும் கலந்து கொண்டிருந்தார். மாநாட்டில் பீற்றர் ஹரோலட் மேலும் தெரிவித்ததாவது.

களுக்கான ஏற்பாடுகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

இன்று ஆரம்பமாகும் மாவீரர் நாள் எழுச்சி நிகழ்வுகள் எதிர்வரும் 27 ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளன. இதனையொட்டி மாவீரர் துயிலும் இல்லங்களில் இன்று காலை 8.00 மணிக்கு தேசியக் கொடி ஏற்றப்பட்டு 27 ஆம் திகதி மாவீரர் நாள் நிகழ்வு முடிவடைந்ததும் இறக்கப்படும்.

பொது நிறுவனங்கள், பாடசாலைகளில் இன்றுமுதல் 27 ஆம் திகதிவரை கடமை முடிந்ததும் பிற்பகல் 12.01 இற்கும், பின்னர் மாலை 6.00 மணிக்கு முன்பாகவும் தேசியக் கொடி இறக்கப்படும்.

மாவீரர் நாளையொட்டி, யாழ்.குடாநாட்டின் பல்வேறு இடங்களும் சிவப்பு மஞ்சள் அமைத்தும், மாவீரர்களின் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டுள்ளன. ஒலிபெருக்கிகள் கட்டப்பட்டு எழுச்சி கீதங்கள் இசைக்கப்படுகின்றன.

வர்த்தக நிலையங்கள், பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள், பாடசாலைகள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களில் சிவப்பு மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டு மாவீரர்களின் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்டுள்ளன.

மாவீரர் நாளையொட்டி பொது அமைப்புக்கள் மாவீரர்களின் பெற்றோரைக் கௌரவித்து, மாவீரர்களின் நினைவாக நினைவுப் பொருட்களையும் வழங்கி வருகின்றன. பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில், மருத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள போர்நிறுத்தம் முறிவடைந்தால் நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்து விடுமென உலக வங்கி எச்சரித்துள்ளது.

உலகவங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட் நேற்று கொழும்பில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலேயே இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்த மாநாட்டில் திறைசேரி செயலர் கலாநிதி பி.பி.ஜயசுந்தரவும் கலந்து கொண்டிருந்தார்.மாநாட்டில் பீற்றர் ஹரோலட் மேலும் தெரிவித்ததாவது. -



வரவு செலவுத்திட்டத்தின் பற்றாக்குறையாக உள்ள 8.6 வீதத்தை வரி வசூலிப்பின் மூலம் 7.5 வீதமாக குறைக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்தபோதிலும் வரிவசூலிப்பு மூலம் இதனை நடைமுறைப்படுத்தப்படமுடியாத (12 ஆம் பக்கம் பார்கக)

## நோர்வே தூதரகம் முன் நேற்று ஆர்ப்பாட்டம்!

(கொழும்பு)

தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் கொலைகளை நிறுத்துமாறு அழுத்தம் கொடுக்கக் கோரி கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரகத்துக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

33 மாதங்களாக புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறையில் இருக்கின்ற அதே வேளை, அண்மைக்காலமாக கொலைகள் இடம்பெற்றுவருவது அதிகரித்துவருகிறது.

இதனைக் கண்டித்து கொலைகளை நிறுத்துமாறு நோர்வே அழுத்தம் கொடுக்க வேண்டும் எனக் கோரியே இந்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

தூதரகத்துக்கு வெளியே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோரை பொலிஸார் தடுத்து நிறுத்தியமை குறிப்பிடத்தக்கது.

படுகொலைகளுக்கு எதிரான அமைப்பு என்ற பெயரில் அரசாங்கத்தின் ஆதரவாளர்களே இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாகத் தெரியவருகிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர் தினநிகழ்வில் ஏற்றிய
# தேசியக் கொடியை அகற்றியதால் படையினருக்கு எதிராக ஆர்ப்பாட்டம்
## மன்னாரில் நேற்று சம்பவம்

(மன்னார்)

மன்னாரில் மாவீரர் தின நிகழ்வுகள் இடம்பெற்ற இரண்டு இடங்களில் ஏற்றப்பட்ட தமிழீழ தேசியக் கொடியினை படையினர் பலவந்தமாக எடுத்துச் சென்றதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றைய தினம் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற மாவீரர் தின விளையாட்டுப் போட்டியில் ஏற்றப்பட்ட தேசியக் கொடியினையும், மன்னார் நகர மண்டபத்தில் மாவீரர்களது பெற்றோரைக் கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்ற இடத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

***மாவீரர்கள் ஒரு சத்திய இலட்சியத்திற்காக மரணிக்கிறார்கள். அவர்களது சாவு சாதாரண மரண நிகழ்வு அல்ல; எமது தேச விடுதலையின் ஆன்மீக அறைகூவலாகவே மாவீரர்களது மரணம் நிகழ்கிறது.***



- வே.பிரபாகரன் - தமிழீழ தேசியத் தலைவர் .

## வாழைச்சேனையில் நேற்றிரவு இருவர் சுட்டுக்கொலை!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - வாழைச்சேனை வீதியில் உள்ள வந்தாறுமுலையில் நேற்றிரவு இரண்டு குடும்பஸ்தர்கள் இனந்தெரியாத ஆயுதபாணிகளால் கூட்டிச் செல்லப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டனர்.

சண்முகம் தயாபரன் (வயது 32) என்பவர் சந்தை வீதியிலும், சம்புநாதன் மனோகரன் (வயது 45) என்பவர் விஷ்ணு கோவில் வீதியில் வைத்தும் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரியவருகிறது.

இவர்களில் சண்முகம் தயாபரன் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் உறவினர்களால் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

**நான்கு வர்ணங்களில் 20 பக்கங்களுடன் தேசியத் தலைவரின் பொன் விழா சிறப்பிதழ் நாளைய நமது ஈழநாட்டுடன் இணைப்பாக வெளிவருகிறது. உங்கள் பிரதிக்கு முந்துங்கள்.**


வான்வெளியில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR
Your friend in the skies...

## யாழ்ப்பாணம் மாநகரசபை

**சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள், கோழிக்கடைகள், துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் என்பவற்றை குத்தகைக்கு வழங்குவதற்கான**

# கேள்வி அறிவித்தல் - 2005

இதன்கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள், கோழிக்கடைகள், துவிச்சக்கரவண்டி பாதுகாப்புநிலையம் ஆகிவற்றை 2005.01.01 ஆம் திகதி முதல் 2005.12.31 வரையான ஒருவருட காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாண மாநகர ஆணையாளராகிய என்னால் 2004.12.07 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 12.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விகள் குறித்த அட்டவணையில் குறிப்பிட்ட பிணைப்பணமும் கேள்விப்படிவக் கட்டணம் ரூபா 300 உம் பெறுமதிசேர் (வற்) வரியும் (15%) செலுத்துவதன்போரில் 2004.12.06 ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப.3.00 மணிவரையும் யாழ்.மாநகரசபையால் வழங்கப்படும் உத்தியோகபூர்வமான படிவங்களில் (இணைப்பிரதிகளில்) சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் அடையாள அட்டை கொண்டுவருதல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களை யாழ்.மாநகரசபையில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டிகளில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது மாநகர ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம். என்ற முகவரியிட்டு அரக்குமுத்திரை இடப்பட்ட உறையிலிட்டு 2004.12.07 செவ்வாய்க்கிழமை பி.ப.12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் கேள்விப்பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். தபாலில் ஏற்படும் தாமதங்களுக்கு மாநகரசபை பொறுப்பேற்கமாட்டாது.

கிடைக்கப்பெற்ற கேள்விகள் 2004.12.07 செவ்வாய்க்கிழமை பி.ப. 2.30 மணிக்கு கேள்விச் சபையால் திறந்து பரிசீலிக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரர் அல்லது அவரது பிரதிநிதி எவரேனும் சமுகமளிக்கமுடியும். மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

**குறிப்பு:-**

1. கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்ந்த தனிப்பட்டவர்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்வித்தொகையின் 50% இற்குச் சமமான தொகைக்கு அங்கீகரிக்கப்பட்ட ஏதாவதொரு வங்கி உத்தரவாத முறி சமர்ப்பித்தல்வேண்டும்.
2. சந்தைகளைக் குத்தகைக்கு பெறுபவர்கள் சந்தைக்கு வரும் பொருட்களின் பெறுமதியின் 3% இற்குமேல் சந்தைவரி அறவிடக்கூடாது.
3. எக்காரணம் கொண்டும் துவிச்சக்கரவண்டிக்கு ரூபா 2.00 ம் மோட்டார் சைக்கிளுக்கு ரூபா 4.00 க்கும் மேலதிகமாக பாதுகாப்புவரி அறவிடக்கூடாது.
4. தங்களால் கோரப்படும் கேள்வித்தொகைக்கு மேலதிகமாக 15% பெறுமதிசேர் வரி (வற்) செலுத்தப்படல் வேண்டும்.
5. இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகளுக்கான மாதாந்தவாடகை செலுத்தப்படல் வேண்டும்.
6. ஜின்னா வீதியில் இருந்த இறைச்சிக்கடைகளுக்குப் பதிலாக மானிப்பாய் வீதியில் தனியார் காணியில் இறைச்சிக்கடைகள் நடாத்த அனுமதி வழங்கப்படும். எனினும் இடத்தைக் குத்தகைக்காரரே தெரிவுசெய்யவேண்டும். அவ்விடம் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்படும்.
7. பாசையூர் பகுதியில் உள்ள இறைச்சிக் கடைகள் இராணுவ காவலரண்களுக்குள் அமைந்திருப்பதால் குத்தகைக்காரரே இடத்தைத் தெரிவுசெய்யவேண்டும். அவ்விடம் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்படும்.

### அட்டவணை

| தொ இல. | பொதுச்சந்தைகள் | மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை (15% பெறுமதிசேர் வரி நீங்கலாக) |
|---|---|---|---|
| 01. | பண்ணை மீன் சந்தை | 10000.00 | 169800.00 |
| 02. | பெரியகடை மரக்கறிச் சந்தை | 10000.00 | 577900.00 |
| 03. | குருநகர் சந்தை | 10000.00 | 942700.00 |
| 04. | செங்குந்தா சந்தை | 10000.00 | 471550.00 |
| 05. | நாவாந்துறை சந்தை | 5000.00 | 157600.00 |
| 06. | பாஷையூர் சந்தை | 2500.00 | 39250.00 |
| 07. | அரியாலை சந்தை | 2500.00 | 66000.00 |
| 08. | புங்கங்குளம் சந்தை | 2500.00 | 16500.00 |
| 09. | கொழும்புத்துறை சந்தை | 1000.00 | 3300.00 |
| 10. | கஸ்தூரியார் வீதியிலுள்ள துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் | 2500.00 | 40550.00 |
| | **இறைச்சிக்கடைகள்** | | |
| 01. | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை இல.01 | 2500.00 | 71500.00 |
| 02. | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை இல.04 | 2500.00 | 94600.00 |
| 03. | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை இல.05 | 2500.00 | 40700.00 |
| 04. | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை இல.06 | 2500.00 | 27650.00 |
| 05. | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை இல.08 | 2500.00 | 28050.00 |
| 06. | பண்ணை கருவாட்டுக்கடை இல.02 | 2500.00 | 22800.00 |
| 07. | பண்ணை கருவாட்டுக்கடை இல.03 | 2500.00 | 57450.00 |
| 08. | பண்ணை கோழிக்கடை இல.07 | 2500.00 | 38500.00 |
| 09. | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை இல.01 | 2500.00 | 44200.00 |
| 10. | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை இல.02 | 2500.00 | 56350.00 |
| 11. | அரியாலை மாட்டிறைச்சிக்கடை இல.01 | 2500.00 | 121150.00 |
| 12. | அரியாலை ஆட்டிறைச்சிக்கடை இல.02 | 2500.00 | 107500.00 |
| 13. | புங்கங்குளம் மாட்டிறைச்சிக்கடை இல.01 | 2500.00 | 182305.00 |
| 14. | புங்கங்குளம் ஆட்டிறைச்சிக்கடை இல.02 | 2500.00 | 40004.00 |
| 15. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை இல.01 | 2500.00 | 38500.00 |
| 16. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை இல.02 | 2500.00 | 4000.00 |
| 17. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை இல.03 | 2500.00 | 29450.00 |
| 18. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை இல.04 | 2500.00 | 27500.00 |
| 19. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை இல.05 | 2500.00 | 13550.00 |
| 20. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை இல.06 | 2500.00 | 7650.00 |
| 21. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை இல.07 | 2500.00 | 8100.00 |
| 22. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை இல.08 | 2500.00 | 6100.00 |
| 23. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை இல.09 | 2500.00 | 6100.00 |
| 24. | நாவாந்துறை ஆட்டிறைச்சிக்கடை இல.10 | 2500.00 | 6800.00 |
| 25. | நாவாந்துறை கருவாட்டுக்கடை இல.11 | 1000.00 | 3900.00 |
| 26. | நாவாந்துறை கருவாட்டுக்கடை இல.12 | 1000.00 | 3900.00 |
| 27. | குருநகர் மாட்டிறைச்சிக்கடை இல.01 | 5000.00 | 155100.00 |
| 28. | குருநகர் மாட்டிறைச்சிக்கடை இல.02 | 5000.00 | 110000.00 |
| 29. | குருநகர் மாட்டிறைச்சிக்கடை இல.03 | 5000.00 | 110000.00 |
| 30. | குருநகர் மாட்டிறைச்சிக்கடை இல.04 | 5000.00 | 122400.00 |
| 31. | குருநகர் மாட்டிறைச்சிக்கடை இல.05 | 5000.00 | 214750.00 |
| 32. | குருநகர் மாட்டிறைச்சிக்கடை இல.06 | 5000.00 | 222550.00 |
| 33. | குருநகர் ஆட்டிறைச்சிக்கடை இல.07 | 2500.00 | 10500.00 |
| 34. | நரிக்குன்று மாட்டிறைச்சிக்கடை இல.01 | 5000.00 | 275000.00 |
| 35. | பாஷையூர் மாட்டிறைச்சிக்கடை இல.01 | 2500.00 | 70300.00 |
| 36. | பாஷையூர் மாட்டிறைச்சிக்கடை இல.02 | 2500.00 | 74800.00 |
| 37. | ஜின்னாவீதி ஆட்டிறைச்சிக்கடை | 2500.00 | 28600.00 |
| 38. | முஸ்லிம்கல்லூரி ஆட்டிறைச்சிக்கடை | 2500.00 | 42450.00 |

**கலாநிதி க.குணராசா,**
**மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்.**

23.11.2004

# வல்வை சிதம்பரக் கல்லூரியில் தேசியத் தலைவரின் பிறந்ததின விழா

(வடமராட்சி)

தேசியத் தலைவரின் 50வது பிறந்தநாள் தேசியத்தலைவர் கல்விபயின்ற வல்வை சிதம்பரக் கல்லூரியில் கொண்டாடுவதற்குச் சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. நவம்பர் 26ஆம் திகதி காலை வல்வை வைத்தீஸ்வரர் ஆலயத்தில் நடைபெறும் விசேட பூஜையுடன் பாடசாலையில் நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

தொடர்ந்து பாடசாலை மாணவர்கள் அணிவகுப்புடன் சென்று வல்வெட்டித்துறையில் உள்ள அவரது வீட்டில் வைத்து பிறந்த நாள் வாழ்த்துச் செய்தியைக் கையளிக்கவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து காலை 10.00 மணிக்குத் தேசியத் தலைவரின் பிறந்தநாள் தொடர்பாகப் பாடசாலையில் விசேட கூட்டம் இடம் பெறும். கடற்புலிகளின் முக்கிய பிரதிநிதிகள் இதில் பங்குபற்றுவார்கள். கூட்டத்தில் முதல் மாவீரன் சத்தியநாதனின் பெற்றோர் உட்பட மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வுகள் இடம் பெறும். தொடர்ந்து பாடசாலைப் பகுதியில் உள்ளவர்கள் உட்பட அனைவருக்கும் இனிப்புகள் வழங்கி குதூகலமாக கொண்டாடப் படவுள்ளது.

## மாபெரும் மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள லயன்ஸ் கழகங்கள் அனைத்தும் இணைந்து லயன் மு.பத்மநாதனால் நடாத்தப்படும் மாபெரும் கண் மருத்துவ முகாம் நாளை காலை 9.00 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

இந்த மருத்துவ முகாமில் வறுமைக்கோட்டிற்கு உட்பட்டவர்களுக்கு இலவசமாக மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளது.

## மாவீரர்தினநிகழ்வு

மாவீரர் தினத்தினை முன்னிட்டு யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையின் ஏற்பாட்டில் மாவீரர்களது பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு கூட்டுறவு சபைத்தலைவர், கனகசபை தலைமையில் இன்று காலை 9.00 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதனைத்தொடர்ந்து தேசியத் தலைவரின் 50வது அகவையினை முன்னிட்டு யாழ்.மாவட்ட கூட்டுறவாளர்களினால் மாவட்ட கூட் டுறவு சபையின் அனுசரணையுடன் "தமிழீழ தேசியத் தலைவர்" மலர் வெளியீடு காலை 10.00 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

★ ★ ★

யாழ். கல்விவலய மாவீரர் தின நிகழ்வு இன்று காலை 11.00 மணிக்கு யாழ் வலயக்கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## நாய்களுக்குத் தடுப்பூசி

சங்கானைப் பகுதிக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி இன்று சங்கானை ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ பாரதி முன்பள்ளியில் 11.30 தொடக்கம் பி.ப. 1.30 வரை ஏற்றப்படும். இப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் தவறாது தமது வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளுமாறு பொது சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்தார்.

## ஆனைப்பந்தி மிஷனில் மருத்துவமுகாம் (47)

கொழும்பு கொட்டாஞ்சேனை மேற்கு அரிமாக் கழகத்தினர் யாழ் ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் வித்தியாலய ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமான மருத்துவப் பரிசோதனைமுகாம் ஒன்றை இன்று 1.00 மணிக்கு பாடசாலையில் நடாத்தவுள்ளனர். மாணவர்களுக்கு சத்துள்ள மருந்து வகைகளும் பசுப்பாலும் வழங்கப்படவுள்ளன. ஆசிரியர்களுக்கு இரத்த அழுத்தம், நீரிழிவு போன்றவற்றுக்கான பரிசோதனைகள் இடம்பெறும்.

## இளைஞனை காணவில்லை

(யாழ்ப்பாணம்)

இளைஞர் ஒருவரைக் காணவில்லை என யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கொக்குவில் கிழக்கு கொக்குவிலைச் சேர்ந்த விஜயகாந்தன் யசிகுமார் எனும் 22 வயது இளைஞரே காணாமற் போயுள்ளார்.

மேற்படி இளைஞர்கடந்த 16ம் திகதி வீட்டிலிருந்து புறப்பட்டதாகவும் இன்னமும் வீடு திரும்பவில்லை என்றும் அவரது தந்தை கடந்த 22 ஆம் திகதியன்று யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார். (த)

## சிறு விளம்பரம்

### சமாதானம் நிலைபெற வழிகாட்டுகை

சமாதானத்துக்கான பிரார்த்தனையும், வெள்ளிக்கிழமை விரத வழிபாடும் சிறக்க சகலரும் பங்கு கொள்க. மக்கள் சேவையுடன் மீள் புனரமைப்புப்புக்கள் முன்மைபெற பணியாற்றுக. வே.கெ.தனபாலன், இணைப்பாளர், இந்துசமய அரச ஊழியர்கள் இணையம். - 223, தேக்கம் தோட்டம் வவுனியா. (974)

நாதன்ஸ் யாழ்ப்பாணம்
(குளிரூட்டப்பட்டது)
2வது வெற்றிவாரம்
தனுஷ், பிரியா நடித்த
ட்ரீம்ஸ் (ரீல்ஸ்)
வெகுவிரைவில் : இரவு 9.00 (பு.நே) காட்சியாக
RAMBO - 3
கா.நே. 10.30 2.30 6.30 9.00 (பு.நே)







திரைஞ்சனல்ஸ் சங்கானை
சத்தியராஜ், பிரதியுஷா நடித்த
சவுண்ட் பார்ட்டி (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
RAMBO - 3
(சி-2723)

## முக்கிய அறிவித்தல்

18.11.2004 அன்று மதுபானசாலை உரிமையாளர்கள் அனைவரும் கலந்துரையாடி எட்டப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக மாவீரர் நாட்களான 26.11.2004, 27.11.2004 திகதிகளில் யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல மதுபான நிலையங்களையும் பூட்டி எங்களுடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**மதுபான நிலைய உரிமையாளர்கள்.**

(988)

# மேலும் 5 வருடங்கள் பதவியிலிருக்க சந்திரிகாவுக்கு ஆதரவளியுங்கள்!

## அமைச்சர் மைத்திரிபால எதிர்க்கட்சிகளிடம் கோரிக்கை

பத்து ஆண்டுகளை தமது பதவியில் பூர்த்தி செய்திருக்கும் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு மேலும் 5 ஆண்டுகள் சேவையாற்ற எதிர்க்கட்சிகள் ஆதரவு வழங்க வேண்டுமென்று அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நேற்றுமுன்தினம் சபையில் கோரிக்கை விடுத்தார்.

ஒரே கட்சி இலங்கையைத் தொடர்ந்து 15 ஆண்டுகள் நிர்வகித்தால் மட்டுமே நாடு அபிவிருத்தி அடையும் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அவரின் கருத்துப்படி தொடர்ந்து 15 ஆண்டுகள் நாட்டை நிர்வகிக்க ஜனாதிபதியும், நாமும் தயாராக இருக்கிறோம்.

வரவு - செலவுத்திட்ட ஒதுக்கீட்டுச் சட்டமூலம் மீதான விவாதத்தில் பேசிய அவர் - மேலும் தெரிவித்ததாவது -

ஜே.வி.பி - சுதந்திரக்கட்சி கூட்டு ஒப்பந்தத்தில் வழங்கப்பட்ட வாக்குறுதிகள், திட்டங்கள் வரவு - செலவுத் திட்டத்தில் உள்ளடங்கப்பட்டுள்ளன.

இந்த கொள்கைக்கு ஏற்ப நிதி அமைச்சர் வரவு - செலவுத்திட்டத்தை தயாரித்தார்.

கிராமியப் பொருளாதாரத்தைப் பலப்படுத்தும் பல திட்டங்கள் இதிலுள்ளன. இது பெருமைக்குரிய விடயமாகும்.

வறுமையான மக்கள் வாழும் பிரதேசங்கள் அதிக நிதி ஒதுக்கப்பட்டு, அபிவிருத்திக்கான வழி அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பணபை நாம் முன்னைய வரவு - செலவுத் திட்டங்களில் ஒருபோதும் அவதானித்திருக்கவில்லை.

1977 - 1994 வரை ஐக்கிய தேசிய கட்சி தொடர்ந்து பதவி வகித்த போதிலும் பொலநறுவை, அனுராதபுரம் பிரதேச பிரதிநிதிகளுக்கு அமைச்சரவை அந்தஸ்தைப் பெற்றுக்கொடுக்கவில்லை.

ஆனால் அந்தப் பிரதேசங்களுக்கு அமைச்சர்களை நியமித்து, அந்தப் பிரதேச மக்களுக்கு எமது அரசாங்கம் அபிவிருத்திக்கான பாதையை உருவாக்கியுள்ளது.

சிறுவர்கள் தொடர்பான தேசிய வரவு - செலவுத்திட்டத்தில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளமை சுட்டிக் காட்டத்தக்கது.

மகாவலி வலயங்களில் வசிக்கும் விவசாயிகளின் வாழ்கை நிலையைப் பலப்படுத்த நடவடிக்கை எடுக கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது.

அரச ஊழியருக்கு வழங்கப்பட்டுள்ள நிவாரணங்களை மக்கள் வரவேற்றுள்ளனர். இது குறித்து நாம் பெருமிதம் கொண்டுள்ளோம். அரச ஊழியருக்கு வழங்கப்பட்டுள்ள 40 சதவீத சம்பள உயர்வு அரசாங்கத்தின் சாதனையாகும்.

எமது வரலாற்றில் இது போன்ற சம்பள உயர்வு வழங்கப்பட்டதில்லை. இதனால் அரச துறை வலுப்படுத்தப்பட்டுள்ளது.

எமது அரசாங்கத்தின் வரவு - செலவுத் திட்டத்திற்கு சாகமான வரவேற்பான கருத்துக்கள் வெளியாகியுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

# தனியார்துறை ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்குங்கள்!

## அமைச்சர் அதாவுட கோரிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதிமுதல் தனியார்துறை ஊழியர்களுக்கு சம்பள உயர்வை வழங்குமாறு பொதுத் தொழிற்துறை அமைச்சர் அதாவுட செனிவிரட்ன முதலாளிமார் சம்மேளனத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் - தற்பொழுது அரசாங்க ஊழியர்களுக்கு 40 வீத சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ளது போன்று, தனியார் துறை ஊழியர்களுக்கும் சம்பள உயர்வை வழங்கவேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார்.

# இலங்கையில் மீண்டும் மரணதண்டனை சர்வதேச மன்னிப்புச் சபை கண்டனம்

(கொழும்பு)

இலங்கையில் மரணதண்டனையை மீண்டும் நடைமுறைப்படுத்துவது தொடர்பாக வெளியான அறிவிப்புக் குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை கவலையையும் கண்டனத்தையும் வெளியிட்டுள்ளது.

மேல்நீதிமன்ற நீதிபதி சரத் அம்பே பிட்டியவின் கொலையை அடுத்து ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிவிப்பில் மரணதண்டனை உடனடியாக அமுலுக்கு வரும் எனத் தெரிவித்திருந்தமை வருந்தத்தக்கது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மரண தண்டனை பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையமாட்டாது எனவும் சர்வதேச மன்னிப்பு சபையின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.




கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் இன்று மாலதி படையணியால் 'வரலாறு தந்த வல்லமை' ஒலிப்பேழை வெளியீட்டு விழா இடம்பெறவுள்ளது.

# வேலைநேரம் நீடிப்பு விவகாரம்

# நாடாளுமன்றக் கூட்டத்தில் ஐ.தே.க எம்.பிக்கள் மோதல்

(கொழும்பு0

அரசாங்க ஊழியர்களின் வேலை நேரத்தை அதிகரிப்பது குறித்து ஏற்பட்ட சர்ச்சையால், நாடாளுமனறத்தில் கூச்சலும், குழப்பமும் ஏற்பட்டது. இதனால் நாடாளுமன்றத்தில் அமைதியின்மை காணப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் களுத துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்னவுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த சமரசிங்கவுக்கும் இடையில் அரச ஊழியர்களின் வேலைநேரம் நீடிப்பதில் ஏற்பட்ட வாக்குவாதத்தாலேயே நாடாளுமன்றில் குழப்பம் ஏற்பட்டது.

அரசாங்க ஊழியர்களின் சேவை நேரம் 9 மணியாக அதிகரிக்கக் கூடாது என்றும், அதனைச் சட்டமாக்குவது நடைமுறைக்குச் சாத்தியம் இல்லை என்றும், ஐக்கிய தேசியக் கட்சியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம -

அரசாங்க ஊழியர்களின் வேலை நேரம் நீடிப்பதற்கான பிரேரணை நாட்டின் நலன்கருதி, தொண்டு அடிப படையில் பிரேரணை முன்வைக்கப்பட்டது என்றும், அதனை நீடிப்பதற்கான சட்டம் நடைமுறைப்படுத்தப்படமாட்டாது என்றும் பதிலளித்தார்.

இதற்கிடையில் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த சமரசிங்க குறுக்கிட்டு - ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன கேட்ட கேள்வி அர்த்தமற்றது என தெரிவித்ததை அடுத்து, இருவருக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

இதன்போதே எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூச்சலிட்டுக் குழப்பத்தை ஏற்படுத்தினர்.

# பாதாள உலகக் குழுவினர் பொலிஸாரால் சுட்டுக்கொலை

மொறட்டுவ- நுகேகொட பகுதிகளில் பல்வேறு குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய இருவர் நேற்று முன்தினம் பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

கொல்லப்பட்டவர்கள் தொப்பி சமிந்தவும், அவரது உதவியாளரும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் இருவரும் குற்றச்செயலொன்றை மேற்கொள்ளும் நோக்குடன் - நாவலபகுதியில் சென்று கொண்டிருந்தவேளை, விசேட குற்றத்தடுப்புப்பிரிவின் பொலிஸ் பொறுப்பதிகாரி சமித்திரஜீவ இவர்கள் இருவரையும் கைதுசெய்தார்.

கைது செய்யப்பட்டவேளை, பொலிஸ் அதிகாரியின் துப்பாக்கியை இவர்கள் அபகரிக்கமுற்பட்ட வேளையிலேயே, இவர்களை பொலிஸ் அதிகாரி சுட்டுக்கொன்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொல்லப்பட்ட இருவரது சடலங்களும் பிரேத பரிசோதனைக்காக, கொழும்பு தெற்கு வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# வடக்கு - கிழக்கு பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கை தீவிரம்

தமிழர் தாயகப் பிரதேசமெங்கும் நாளைமறுதினம் நடைபெறவுள்ள மாவீரர் தின நிகழ்வை முன்னிட்டு, வடக்கு - கிழக்குப் பிரதேசங்களின் பாது காப்பு நடவடிக்கைகளைப் பலப்படுததும் பணிகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன்படி வடக்கு - கிழக்கிலுள்ள அனைத்துப் பொலிஸ் நிலையங்களிலும் பணியாற்றும் பொலிஸாரின் விடுமுறைகள் அனைத்தும் ரத்துச்செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

விசேட கடமைகளுக்காக அவர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக, வன்னிப் பிராந்தியத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகம் தகவல் வெளியிட்டுள்ளது.

மாவீரர் தினத்தை நோக்காகக் கொண்டு, இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் குழப்ப நிலையை தோற்றுவிப்பதற்கும், படையினர் மீது தாக்குதல்களைத் தொடுப்பதற்கும் விடுதலைப் புலிகள் நடவடிக்கை எடுத்திருப்பதாக, இராணுவத்தினரின் உளவுப் பிரிவுக்குத் தகவல் கிடைத்துள்ளதாகவும், இதையடுத்து பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் காலப்பகுதியில் இராணுவம் - பொலிஸ் கூட்டாக இணைநது நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படடுள்ளது.

(தே)

## நவம்பர் 29 முதல் தேசிய தகவல் தொழில்நுட்ப வாரம்

இலங்கையில் எதிர்வரும் 29 ஆம் திகதி முதல் டிசம்பர் 5ஆம் திகதி வரை தேசிய தகவல் தொழில் நுட்பவாரம் அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்பட்டு உள்ளதாக தெரிவிக கப்பட்டுள்ளது.

இது குறித்து இலங்கைத் தகவல் தொழில் நுட்ப நிலையத் தலைவர் பேராசிரியர் ஏ.மு.சமர நாயக்க கருத்துத் தெரிவிக்கையில் -

இதே காலப்பகுதியில் தகவல் தொழில் நுட்பம் குறித்த இரண்டு சர்வதேச மகாநாடு இலங்கையில் இடம பெறவிருப்பதாகவும் , 'இத்துறையை அபிவிருத்தி செய்யும் தொடர்ச்சியில் இலங் கைக்கு கிடைத்த அரிய சந்தர்ப்பம் இது எனவும் தெரிவித்தார்.

# நாடாளுமன்ற உறுப்பினர்களின் முறைப்பாடு ஆலோசனைச் சபைக்கு

நாடாளுமன்ற உறுப்பினர்கள் நால்வரது சிறப்புரிமைகள் மீறப்பட்டது தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள முறைப்பாடுகளை, ஆலோசனைக் குழுவுக்குச் சமர்ப்பிக்கமுடியும் என சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லெக்கு பண்டார நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

சிறப்புரிமைகள் மீறப்பட்டது தொடர்பாகப் புஞ்ஞானந்த தேரர் - வர்த்தக நுகர்வோர் அலுவல்கள் அமைச்சர் பெணாண்டோபுள்ளே, கம்பஹா மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கருஜயசூரிய மற்றும் கம்பஹா மாவட்ட நாடாளுமனற உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேரா ஆகியோர் ஆலோசனைகளைச் சமர்ப்பித்தனர்.

தனது உயிருக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகப் புஞ்ஞானந்த தேரரால் விடுக்கப்பட்டுள்ள சிறப்புரிமை ஆலோசனை, பிரதான எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரால் கடந்த மாதம் 27, 28 ஆம் திகதிகளில், சபையில் நடந்த குழப்ப நிலை பறறி கரு ஜயசூரியவின் சிறப்புரிமை ஆலோசனை, தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல் ஒன்றின் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கபபடும் உணவுகள் பற்றி வெளிப்படுத்தியதன் மூலம், நாடாளுமன்ற உறுபபினர்களின் சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதான ஆலோசனை என்பனவும் இந்த முறைப்பாட்டில் அடங்கியுளளன.

மேலதிகமாகப் பிரதியமைச்சர் ஜி.எம்.தசநாயக்கவுக்கு 5 மாதங்களாக சம்பளம் வழங்கப்படவில்லை யெனப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டமையால், அவரது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாக - பெர்னாண்டோ புள்ளேயின் மத்திய சிறப்புரிமைப் பிரசசினைகள் குறிப்பிடப்பட்டுள் ளது.

(தே)

# 800 ஆசிரியர்களுக்கு ஜனாதிபதி விருது!

(கொழும்பு)

அரசாங்கப் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களைப் பாராட்டி, கௌரவிக்கும் நிகழ்ச்சித் திட்டமொன்றை கல்வியமைச்சு அமுல்படுத்தவுள்ளது.

ஜனாதிபதியின் விசேட பணிப்புரைக்கு அமைவாக, தேசிய ரீதியல் இந்தத் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாக, கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி தாரா டிமெல் தெரிவித்தார்.

குறித்த கல்வியாண்டில் கற்பித்தல் நடவடிக்கைகளிலும், ஏனைய இணைப்பாட விதானங்களிலும் வெளிப படுத்தும் திறமைகளை அடிப்படையாகக்கொண்டு, அதிபர்களின் சிபார்சுடன் ஆண்டுதோறும் ஆசிரியர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் 1000 ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டு, ஜனாதிபதி விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்த ஆண்டுக்கான சிறந்த ஆசிரியர்களைப் பாராட்டும் விழா- பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் விரைவில் நடைபெறவுள்ளது.

இதில் ஜனாதிபதி சந்திரிகா பரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

(தே)

# இந்திய - தென்னாபிரிக்க அணிகள் முதல் டெஸ்ட் போட்டி சமநிலையில்!







(கான்பூர்)

இந்திய - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையே கான்பூரில் நடந்த முதல் டெஸ்ட் சமநிலையில் முடிந்தது.

முதலில் ஆடிய தென்னாபிரிக்க அணி முதல் இனிங்ஸில் 9 விக்கெட் இழப்புக்கு 510 ஓட்டங்களை குவித்து டிக்ளேர் செய்தது. பின்னர் முதல் இனிங்ஸை ஆடிய இந்திய அணி 4 ஆவது நாள் ஆட்டநேர இறுதியில் 401 ஓட்டங்களை எடுத்திருந்தது.

ஷேவாக் அபாரமாக ஆடி 164 ஓட்டங்களைக் குவித்தார். 228 பந்துகளில் 24 பவுண்டரி, 2 சிக்ஸருடன் இந்த ஓட்டங்களை அவர் எடுத்தார்.



ஆட்டநேர முடிவில் ராவிட் 52 ஓட்டங்களுடனும், லக்ஷ்மன் 4 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்று 5 ஆவது மற்றும் கடைசி நாள் ஆட்டம் நடந்தது. ராவிட்டும், லக்ஷ்மனும், தொடர்ந்து ஆடினார்



கள். தென்னாபிரிக்க வீரர் என்ரினியின் பந்துவீச்சில் இந்திய அணியின் விக்கெட்டுக்கள் சரிந்தன.

மதிய உணவு இடைவேளைக்குச் சற்றுமுன்பு இந்திய அணி 134.4 ஓவரில் 466 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

ராவிட் 54 ஓட்டங்களுடனும், லக்ஷ்மன் 9 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். கடைசி நேர சகீர்கான் 30 ஓட்டங்கள் எடுத்தார்.

என்ரினி, ஹோல் ஆகியோர் தலா 3 விக்கெட்டும், பொலக் 2 விக்கெட்டும், புருயின், பீட்டர்சன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டும் எடுத்தனர்.

44 ஓட்டங்கள் முன்னிலையில் தென்னாபிரிக்க அணி 2 ஆவது இனிங்ஸை ஆடியது. மதிய உணவு இடைவேளையின் போது அந்த அணி விக்கெட் இழப்பின்றி 18 ஓட்டங்களை எடுத்திருந்தது.

மதிய உணவு இடைவேளைக்குப் பிறகு ஹோல் 26 ஓட்டங்களுடன் ஹர்பஜன் பந்தில் ஆட்டமிழந்தார். அப்போது ஸ்கோர் 67 ஆக இருந்தது.

தென்னாபிரிக்க அணியின் தலைவர் சிமித் 47 ஓட்டங்கள் எடுத்த நிலையில் கார்த்திக் பந்துவீச்சில் கம்பீரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அவரைத் தொடர்ந்து களமிறங்கிய ஜார்ஸ்வெல்ட் 13 ஓட்டங்கள் எடுத்த நிலையில் முரளி கார்த்திக் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

ரூடோல்ப் 2 ஓட்டங்களுடன் ஹர்பஜன் பந்தில் கார்த்திக்கிடம் பிடிகொடுத்து பெவிலியன் திரும்பினார்.

ஆட்டத்தின் முடிவில் கலிஸ் 28 ஓட்டங்களுடனும், டிப்பென்னர் 31 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

ஆட்டநாயகன் விருது தென்னாபிரிக்க வீரர் அன்ட்ரூ ஹோலுக்கு வழங்கப்பட்டது.

இந்திய அணி இரண்டாவது இனிங்ஸை ஆடாமலேயே இந்த டெஸ்ட் சமநிலையில் முடிந்தது.

2 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் எதிர்வரும் 28 ஆம் திகதி முதல் டிசம்பர் 2 ஆம் திகதி வரை கொல்கத்தாவில் நடைபெறவுள்ளது.

# ஒருநாள் போட்டி தரவரிசை பந்துவீச்சில் வாஸ் முதலிடம்



டெஸ்ட் கிரிக்கெட் மற்றும் ஒரு நாள் போட்டிகளின் அடிப்படையில் அணிகள் மற்றும் வீரர்களின் வரிசைப் பட்டியலை சாம்சங் நிறுவனம் வெளியிட்டுள்ளது.

டெஸ்ட் போட்டியின் பந்துவீச்சில் இந்திய சுழற்பந்து வீச்சாளர் அனில் கும்ளே 190 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தில் உள்ளார். சமீபத்தில் நடந்த அவுஸ்ரேலியாவுக்கு எதிரான தொடரில் சிறப்பாக பந்து வீசியதைத் தொடர்ந்து கும்ளே முதலிடத்துக்கு முன்னேறியுள்ளார்.

190 புள்ளிகள் பெற்றுள்ள ஸ்ரீவ் ஹர்மிசன் 2 ஆவது இடத்திலும், அவுஸ்ரேலிய வீரர் வோர்ன் (155 புள்ளிகள்) 3 ஆவது இடத்திலும் உள்ளனர்.

டெஸ்ட் துடுப்பாட்டத்தில் மேற்கிந்தியத் தீவு வீரர் லாரா (138 புள்ளிகள்) முதலிடத்திலும், இலங்கை வீரர்கள் ஜெயசூர்யா (130 புள்ளிகள்), சங்ககார (129 புள்ளிகள்) ஆகியோர் 2 ஆவது மற்றும் 3 ஆவது இடத்திலும் உள்ளனர். இந்திய அதிரடி ஆட்டக்காரர் ஷேவாக் 127 புள்ளிகளுடன் 4 ஆவது இடத்தில் உள்ளார்.

ஒருநாள் போட்டியின் துடுப்பாட்ட வரிசையில் 176 புள்ளிகளுடன் டெண்டுல்கர் 4 ஆவது இடத்தில் உள்ளார். சைமன்ஸ் (அவுஸ்ரேலியா), பிளின்ரொப் (இங்கிலாந்து), இன்ஸமாம் (பாகிஸ்தான்) ஆகியோர் முறையே முதல் 3 இடங்களில் உள்ளனர்.

பந்துவீச்சில் இலங்கை வீரர் வாஸ் (159 புள்ளிகள்) முதலிடத்திலும், இந்திய வீரர் இர்பான் பதான் (149 புள்ளிகள) 2 ஆவது இடத்திலும், அவுஸ்ரேலிய வீரர் கஸ்பரோவிச் 3 ஆவது இடத்திலும் உள்ளனர்.

அணிகள் வரிசையில் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் வழக்கம்போல அவுஸ்ரேலிய அணியே முதலிடத்தில் உள்ளது. இந்திய அணி டெஸ்ட் போட்டியில் 6 ஆவது இடத்திலும், ஒருநாள் போட்டியில் 7 ஆவது இடத்திலும் உள்ளது.




# 1500 மீ பிரீஸ்டைல் நீச்சலில் பிரான்ஸ் வீரர் உலகசாதனை

(பரிஸ்)

பிரான்ஸில் நடைபெற்றுவரும் சர்வதேச நீச்சல் போட்டியில் 1500 மீற்றர் பிரீஸ்டைல் போட்டியில் புதிய உலக சாதனை படைத்துள்ளார் பிரான்ஸைச் சேர்ந்த லாரே மனவ்டோ.

17 வயதாகும் இவர், 1500 மீற்றர் தூரத்தை 15 நிமிடம் 42.39 வினாடிகளில் கடந்தார்.

இதனால், 22 ஆண்டுகளுக்கு முன்பு புளோரிடாவில் நடைபெற்ற போட்டியில் கிழக்கு ஜேர்மனியைச் சேர்ந்த பெட்ரா ஷினிடர் நிகழ்த்தியிருந்த சாதனை (15:43:31) முறியடிக்கப்பட்டுள்ளது.

புதிய சாதனை படைத்த மனவ்டோ, ஏதென்ஸ் ஒலிம்பிக் சம்பியன் என்பது குறிப்பிடத்தக்கது.

400 மீற்றர் போட்டியில் தங்கம் வென்று, 50 ஆண்டுக்கும் மேலாக தனது நாடு பெறாத சாதனையை அப்போது நிகழ்த்தினார் மனவ்டோ.

வெள்ளி, வெண்கலப் பதக்கங்களையும் ஒலிம்பிக்கில் அவர் கைபற்றினார்.

# இந்த ஆண்டில் 1000 ஓட்டங்களை கடந்து வீரேந்தர் ஷேவாக் சாதனை



இந்திய கிரிக்கெட் வீரர் ஷேவாக் தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் 164 ஓட்டங்களை விளாசினார். இதன் மூலம், இந்த ஆண்டில் ஷேவாக் ஆயிரம் ஓட்டங்களைக் கடந்து சாதனை படைத்தார்.

இந்த ஆண்டு இந்திய அணி 9 டெஸ்ட் போட்டிகளில் களம் இறங்கியுள்ளது. இதில் ஷேவாக் 3 சதங்கள் மற்றும் 3 அரைச்சதங்களுடன் இந்தச் சாதனையை எட்டினார். இந்திய தரப்பில் டெஸ்ட் கிரிக்கெட்டில் இந்தச் சாதனை 13 ஆவது முறையாக நிகழ்த்தப்பட்டுள்ளது.

கவாஸ்கர் மற்றும் டெண்டுல்கர் ஆகியோர் தலா 4 முறை இந்தச் சாதனையை நிகழ்த்தியுள்ளனர். இவர்கள் ஒரு ஆண்டில் ஆயிரம் ஓட்டங்களுக்கு மேல் எடுத்துள்ளனர். இந்த ஆண்டு ஷேவாக் அவுஸ்ரேலிய அணிக்கு எதிராக 5 டெஸ்ட் போட்டிகளில் மோதினார்.

இதில் ஷேவாக் ஒரு சதம் உட்பட ஒட்டுமொத்தமாக 418 ஓட்டங்களைக் குவித்தார். பாகிஸ்தான் அணிக்கு எதிராக 3 டெஸ்ட் போட்டிகளில் ஆடிய ஷேவாக் முச்சதம் உட்பட (309 ஓட்டங்கள்) 438 ஓட்டங்களைக் குவித்துள்ளார்.

தென்னாபிரிக்க அணிக்கு எதிராக ஒரு டெஸ்ட் போட்டியில் ஆடி ஷேவாக் 164 ஓட்டங்களை எடுத்துள்ளார். பவுண்டரி என்ற முறையில் ஷேவாக் 62.74 சதவீத ரன்களை எடுத்திருப்பது இன்னொரு முக்கிய அம்சம் ஆகும்.

தென்னாபிரிக்காவுக்கு எதிராக இன்னும் ஒரு டெஸ்ட் போட்டி இருப்பதால் அதிக ஓட்ட குவிப்பாளர் வரிசையில் ஷேவாக் முன்னணி இடத்தை பிடிக்க வாய்ப்புள்ளது. சமீபத்தில் அஸ்திரேலிய அணி இந்தியா வந்த போது ஷேவாக் சரியான முறையில் ஆடவில்லை.

இதனால் அவரின் சாதனை கொஞ்சம் தாமதமாக நிகழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இதில் இந்த ஆண்டில் ஷேவாக் ஒட்டுமொத்தமாக 1020 ஓட்டங்களைப் பெற்றிருக்கிறார்.

## இந்திய துடுப்பாட்ட வீரர்களின் மோசமான ஆட்டத்துக்கு ஆடுகளங்களே காரணம்

### இயன் பொத்தம் கூறுகிறார்

இந்தியத் துடுப்பாட்ட வீரர்கள் மோசமாக விளையாடி வருவதற்கு இந்தியாவில் தயாரிக்கப்பட்டுள்ள மோசமான ஆடுகளங்களே காரணம் என இங்கிலாந்தின் முன்னாள் சகலதுறை ஆட்டக்காரர் இயன் பொத்தம் கூறியுள்ளார்.

மிகச்சிறந்த துடுப்பாட்ட வரிசையைக் கொண்டது இந்தியா. ஆனால், மோசமான ஆடுகளங்களால் அந்த அணியினர் துடுப்பாட்டத்தில் தோல்வியுற்று, வெறுப்படைய வேண்டியுள்ளது.

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான சமீபத்திய தொடரிலும் இதேநிலைதான் காணப்பட்டது. அவுஸ்ரேலியாவுக்கு அடுத்து உலகில் சிறந்த அணியாக நான் இந்தியாவைக் கருதவில்லை. எழுச்சியான ஆட்டத்தை வெளிப்படுத்திவரும் இங்கிலாந்து அணியே தற்போது அச்சிறப்புடன் உள்ளது என்றார் பொத்தம்.

# இந்திய அணிக்கு பயிற்சியாளராக பொறுப்பேற்கும் திட்டம் இல்லை!

## ஸ்ரீவோ தெரிவிப்பு



இந்தியா அல்லது அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணிக்கு பயிற்சியாளராக உடனடியாக பணியாற்றும் எண்ணம் எதுவும் தமக்கு இல்லை என்று முன்னாள் அவுஸ்ரேலியக் கப்டன் ஸ்ரீவோ நாக்பூரில் தெரிவித்தார்.

நிருபர்களுடன் பேசிய ஸ்ரீவோ மேலும் கூறியதாவது -

ஏற்கனவே ஒப்புக்கொண்ட வேலைகள் எனக்கு நிறைய உள்ளன. சில சமூக தன்னார்வத் தொண்டு நிறுவன சேவைகள் உள்ளன. அதை முதலில் முடிக்கவேண்டும்.

இந்திய அணியின் பயிற்சியா ளர் ஜோன் ரைட் சிறப்பாக செயற்பட்டு வருகிறார். இந்த நிலையில் பயிற்சியாளர் விடயமாக இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை என்னை அணுகவும் இல்லை.

அப்படியே அழைப்பு வந்தாலும் அந்த நேரத்து சூழ்நிலையைப் பொறுத்து முடிவெடுப்பேன். மேலும் இந்திய கிரிக்கெட் சபை விதிக்கும் நிபந்தனைகள், மற்ற விடயங்களும் திருப்திகரமாக இருக்குமானால் ஒருவேளை பயிற்சியாளர் பணியை ஏற்றுக்கொள்வேன்.

நடுவர்களுக்கு மிகுந்த பொறுப்பு உள்ளது. அவர்கள் தங்களது பணியைச் செய்ய விடவேண்டும். சிலவேளைகளில் நடுவரின் தீர்ப்பு தவறாக இருப்பதற்கு வாய்ப்புண்டு. அப்போது மூன்றாவது நடுவர்தான் சரியான முடிவெடுக்க வேண்டும். அண்மையில் முடிவடைந்த இந்திய - அவுஸ்ரேலிய தொடரில் அவுஸ்ரேலிய அணி வெற்றிபெற்றது.

மும்பை உட்பட பல மைதானங்களிலும் ஆடுகளங்கள் நன்றாக இருந்ததும் ஒரு காரணம் என்றார்.

# மாவீரர்களின் பெற்றோரை கௌரவித்தல் தேசியத் தலைவரின் முக்கிய குறிக்கோள்

## அரசறிவியல் கல்லூரி விரிவுரையாளர் அரசண்ணா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எமது போராட்ட கால கட்டத்தில் மாவீரர்கள் பெற்றுத் தந்த வெற்றிகள் விலை மதிக்கப்பட முடியாத ஒன்றாக விளங்குகின்றன. இன்றுவரை போராட்டத்தில் 17 ஆயிரத்து 780 மாவீரர்களை நாம் இழந்திருக்கின்றோம். இந்த மாவீரர்களின் பெற்றோரை கௌரவிப்பது எமது தேசியத் தலைவரின் முக்கியமான குறிக்கோளில் ஒன்றாகவே விளங்குகின்றது. இவர்கள் உயர் நிலையிலே வைத்துப் போற்றப்படவேண்டியவர்கள் என தூயவன் அரசறிவியல் கல்லூரியைச் சேர்ந்த அரசண்ணா தெரிவித்தார்.

யாழ். மாவட்ட வெண்மை வாணிப சங்கத்தினரின் ஏற்பாட்டில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

இந்த மாவீரர்கள் காலத்தின் தேவையை நிறைவு செய்துகொள்ளப் பிறந்த சரித்திர நாயகர்கள். தமிழினத்தின் எழுச்சியையும் மாவீரர்கள் தந்த கொடையினால் பெற்ற ஒன்றாகவே நான் கருதுகின்றேன்.

போராட்ட காலத்தின் ஆரம்ப கால நகர்வை எடுத்துக் கொள்வோமானால், ஆரம்ப மன்னர்களும் மக்களும் தமக்கென ஓர் அத்தியாயத்தை ஏற்படுத்தி வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் காலப்போக்கில் அதிகார வர்க்கத்தின் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டனர். அந்தக் கால கட்ட வாழ்க்கை முறைமையை இல்லாமல் செய்ய வேண்டும் என்றால் நாம் ஆயுதம் ஏந்திப் போராட வேண்டும் என்ற நிலை தமிழர்கள் மீது திணிக்கப்பட்ட ஒன்றாகவே நாம் கருதுகின்றோம். இந்த வேளையில்தான் எமது தேசியத் தலைவர் ஆயுதப் போராட்டப் பாதையில் ஈடுபட்டார். அவரோடு தோளோடு தோள் நின்று எமக்குப் பல வெற்றிகளைத் தந்த மாவீரர்கள் எக்காலமும் நினைவில் வைத்துப் போற்றப்பட வேண்டியவர்கள்.

அதிகார வெறி பிடித்த பேரினவாதத்திற்கும், சர்வதேசத்துக் கும் நாங்கள் நாங்களாகவே வாழ விரும்புகின்றோம். தமிழ்த் தேசியம் என்ற பூர்வீக இனம் ஒன்று இருக்கின்றது என்பதைத் தெளிவாக உணர்த்தியவர்கள் மாவீரர்கள். எமது முன்னோர்கள் விட்டுச் சென்ற ஆதாரங்களைக் கொண்டு - இது எமது மரபுவழித் தாயகம், இந்த மண் எங்கள் மண் என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது. ஆனால், எமது முன்னோர்கள் எம்மினம் அடிமையாக வாழவேண்டும் என்ற எண்ணத்தை விட்டுச் செல்லவில்லை.

நமக்கென ஓர் தேசியம், வாழ்வியல் முறை, சுயாதீன அதிகாரம் போன்ற பல உரிமைகளோடு நாம் வாழவேண்டும் என்ற எண்ணம் அவர்கள் மனதில் தோன்றியிருக்கலாம். அவ்வாறான ஓர் வாழ்க்கை முறையை எமக்குப் பெற்றுத் தர வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள்தான் மாவீரர்கள்.

நாம் அடிமையாக வாழாமல், நாம் ஓர் தேசிய இனமாக சுதந்திரமாக வாழவேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்திக் கொடுத்தது, எமது மாவீரர்கள் செய்த தியாகம் என்றுதான் சொல்லவேண்டும்.

இன்று நாம் சமாதானப் பாதையில் செல்கின்றோம் என்றால் அது மாவீரர்களால், அதிகார வர்க்கத்தினர் கற்றுக்கொண்ட பாடம் என்றுதான் கூறவேண்டும்.

எமது தேசியத் தலைமை, தேசியக் கொடி, தமிழீழ நீதித்துறை, காவல்துறை, தமிழீழ வைப்பகம் என்பன இன்று நிலைபெற்றிருக்கின்றது என்றால், அது இந்த சரித்திர நாயகர்களின் தியாகத்தாலேயே ஏற்பட்டிருக்கிறது. மாவீரர்கள் எம்மை வெற்றிப் படலத்தில் விட்டுச் சென்றுள்ளார்கள். அவர்கள் எக்காலமும், எந்நேரமும் போற்றப்படவேண்டியவர்கள் என அரசண்ணா மேலும் தெரிவித்தார்.





வெண்மை வாணிப சங்கத்தின் ஏற்பாட்டில் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வில் தேசியக் கொடியை யாழ்.நல்லூர் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செழியனும், பொதுச் சுடரினை யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் ஊடகப்பேச்சாளர் ப.கனகலிங்கமும் ஏற்றுவதை படங்களில் காணலாம்.

### நல்லூர் மணிமண்டபத்தில் பண்ணிசை வகுப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணி மண்டபத்தில் வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிமுதல் 5.30 மணிவரை தேவார இசைமணி இரா.திருஞானசம்பந்தனால் பண்ணிசை வகுப்பு நடாத்தப்படுகின்றது. இதில் விரும்பியவர்கள் பங்குபற்ற முடியும்.

இதேவேளை இங்கு ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனியான யோகாசன தியான வகுப்புக்களும் நடாத்தப்படுகின்றன. இந்த வகுப்புக்களில் ஆர்வமுள்ளவர்கள் பங்குபற்ற முடியும் என இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள மாவட்ட அலுவலகத்தினர் தெரிவித்துள்ளனர்.

# வலி. வடக்கு அபிவிருத்திக்கு 10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் வலி வடக்கு பகுதி அபிவிருத்திக்கென பத்துலட்சத்து இருபத்தையாயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிதி மூலம் - சனசமூக நிலையங்கள் திருத்தம் புத்தகங்கள் கொள்வனவு, தளபாட கொள்வனவு, சனசமூக நிலையங்களில் மலசல கூடம் அமைத்தல், கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு தையல் இயந்திரம் வழங்குதல், தெல்லிப்பளை கூட்டுறவு வைத்திய சாலையின் அவசர கட்டடத் திருத்தம், வசாவிளான் மத்திய மகா வித்தியாலய அபிவிருத்தி, விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல் போன்ற செயல் திட்டங்களுக்கு இந்தப் பணம் பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாக வலி. வடக்கு பிரதேச செயலக அதிகாரி தெரிவித்தார். (101)

## சின்னஞ்சிறு செய்திகள்

### சான்றிதழ் வழங்கும் வைபவம்

(யாழ்ப்பாணம்)

சலனச் சித்திர அமைப்பினால் நடாத்தப்பட்ட திரைப்படத் தொழிநுட்பகற்கைநெறியை பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றதழ் வழங்கும் வைபவம் எதிர்வரும் 27 ஆம் திகதி காலை 9 மணிக்கு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத்தும், சிறப்பு விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

### செட்டிச்சோலை வீதியை புனரமைக்கத் திட்டம்

(வலிகாமம்)

வலி. வடக்கு பிரதேச செயலகம் இந்த ஆண்டிற்கான அபிவிருத்தித் திட்ட நிதியில் இருந்து அளவெட்டியிலுள்ள செட்டிச்சோலை வீதியை 7 லட்சம் ரூபா செலவில் அபிவிருத்தி செய்ய உத்தேசித்துள்ளது.

அத்துடன் இந்த அபிவிருத்தி நிதியிலிருந்து சனசமூக நிலையங்களின் புனரமைப்புப் பணிகளையும் மேற்கொள்ளவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(101)

### பருத்தித்துறை நீதிமன்றத்தில் அஞ்சலி நிகழ்வு

(வடமராட்சி)

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமரர் சரத் அம்பேபிட்டியவின் மறைவையொட்டி, பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்கத்தினால் வேண்டிக் கொள்ளப்பட்ட தன்படி - கடந்த 23 ஆம் திகதி பருத்தித் துறை மாவட்ட நீதிபதி கந்தையா. அரியநாயகம் தலைமையில் பருத் தித்துறை நீதிமன்றில் 2 நிமிடநேர மௌன அஞ்சலி செலுத்தப்பட் டது.

குறிப்பிட்ட நிகழ்வு பற்றிய குறிப்பினை அவரது குடும்பத்தினருக்கு அனுப்பிவைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (12)

### வீடமைப்புத் திட்ட பயனாளிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

உலக வங்கியின் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் வலி வடக்குப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பயனாளிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

மாதாந்தம் இரண்டாயிரத்து ஐநூறு ரூபாவுக்குட்பட்ட வருமானமுடையவர்களும், வீடுகள் மிகவும் பாதிப்புக்குள்ளானவர்களதும் பெயர் விபரங்களை அந்தந்தப் பகுதி கிராம சேவகர்களுடாக வலி. வடக்குப் பிரதேச செயலகம் திரட்டி வருகிறது. (101)

# சுன்னாகம் அரசினர் வைத்தியசாலை கல்லாக் கட்டுவனுக்கு மாற்றம்

சுன்னாகம் ரயில் நிலையத்தின் முன்பாக இயங்கி வந்த அரசினர் வைத்தியசாலை கடந்த வாரம் தொடக்கம் சுன்னாகம் கல்லாக்கட்டுவன் சிவ பூதவராயர் கோவிலுக்கு முன்பாக புதிய கட்டடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு அவசர புனரமைப்பு திட்டத்தின் உதவியுடன் வடகிழக்கு மாகாண கட்டடத் திணைக்களத்தினால் இந்தக் கட்டடம் அமைக்கப்பட்டது.

இதேவேளை, நீர்ப் திட்டத்தின் உதவியுடன் யாழ். பண்ணை மருந்துக் களஞ்சி யம், தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலை, சாவகச்சேரி பிரதேச செயலகக் கட்டடம், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, கரவெட்டி பிரதேச செயலகம், மந்திகை வைத்திய சாலையில் சுகாதார வைத்திய அதிகாரி அலு வலகம், வைத்திய விடுதி, சங்கானை வைத்திய சாலை அருகில் வைத்திய அதிகாரி அலுவலகம், யாழ்ப்பாணத்தில் ஆளுநர் அலுவலகம் என்பன கட்டடப்பட்டுக் கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. (101)

# வலி. வடக்கு மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கத் திட்டம்!

(உடுவில்)

வலி. வடக்கு பிரதேசசபை எல்லைக்குட்பட்ட இந்த வருடம் நடைபெற்ற கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்று பல்கலைக்கழகம் செல்லவுள்ளவர்களுக்கும், ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கும் புலமைப்பரிசில் வழங்கும் திட்டத்தை, வலி. வடக்குப் பிரதேச சபை அடுத்த ஆண்டுமுதல் நடைமுறைப்படுத்தத் திட்டமிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிரமமாக ஆதனவரி செலுத்தும் வறுமைக்கோட்டிற்குட்பட்ட குடும்பங்களின் பிள்ளைகள், இந்தத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவர் என பிரதேச சபைச் செயலாளர் எஸ்.செல்வரத்தினம் தெரிவித்தார்.

அத்துடன் அடுத்த வருடம் முதல் முன்பள்ளி சிறுவர்களுக்கு சத்துணவு வழங்கும் திட்டமும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (101)

## வாழ்த்துக்கள்

### இரண்டாவது அகவையில்



பெயர் : பு.றகியா
முகவரி : செல்வபுரம், கரணவாய்.

### ஏழாவது அகவையில்



பெயர் : ந.ஷாமந்தி
முகவரி : திருவையாறு, கிளிநொச்சி

சிறாரின் பெயர் : ..........
முகவரி : ..........
பிறந்த ஆண்டு: ..........

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

..........
பெற்றோர் ஒப்பம்



## பொருண்மியம்

# தாயகப் பகுதி நீர்ப்பாசனப்புனரமைப்புகள் நடைமுறைச் சாத்தியமாய் இருக்கவேண்டும்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

கிளிநொச்சியின் மேற்குப் பகுதி வரட்சி மிகுந்தது. அக்கராயன், வன்னேரி, கரியாலைநாகபடுவான் ஆகிய 3 பாரிய நடுத்தரக் குளங்கள் இருந்துதான் வரட்சியை ஓரளவு சமாளிக்கின்றன. அக்கராயன் குளப்புனரமைப்புக்கு, ஜப்பானின் ஜபிக் திட்டம் 200 மில்லியன் ரூபாவை வழுங்க முன்வந்துள்ளது. இதன்மூலம் அக்கராயன்குளம் முழுமையாகப் புனரமைக்கப்பட்டு, அதன் கட்டு பலப்படுத்தப்பட்டு, அதன் கொள்ளளவு முழுமையாக நீரைத் தேக்க வகை செய்யப்படவுள்ளது. இதன் மூலம் அக்கராயன் பிரதேசம் முழுமையாக அதன் உட்கட்டுமானங்கள் புனரமைக்கப்படவும் வேண்டியுள்ளது. அக்கராயனைவிடக் கிளிநொச்சியின் மேற்கிலுள்ள குளங்களின் கொள்ளளவு அந்தப் பகுதிகளின் வரட்சியைத் தணிக்கக்கூடியளவுக்கு இல்லை. இதேவேளை அக்கராயன் குளத்தால் பருவமழைக் காலத்தில் அதிகளவு நீர் வெளியேறிக் கடலில் கலக்கிறது. இதைத் தடுப்பதற்காக அக்கராயன் ஆற்றின் இறுதிப் பகுதியிலுள்ள பூநகரி குடமுறுட்டி ஆற்றை மறித்து அந்தப் பகுதியில் ஏற்கனவேயுள்ள பழைய குடமுறுட்டி அணையுடன் இணைத்து நீரைத்தேக்கிப் பூநகரிப் பகுதிக்கு நீர்வளத்தை வழுங்க 100 மில்லியன் ரூபா திட்டம் வரையப்பட்டுள்ளது. குடமுறுட்டி ஆறு, அக்கராயன் ஆறு, தெளிவுட்டி ஆறு, கலவலப்பு ஆறு மற்றும் பல சிற்றாறுகள் கொக்குடையான் குளத்தைப் புனரமைத்துப் பூநகரிக்கான நீர் வளத்தைப்பேண 250 மில்லியன் ரூபா செலவில் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தக் குளம் குடமுறுட்டிக்கு அண்மையாகவுள்ளது. இது தெளிவுட்டி ஆற்றை மையமாகக் கொண்டது. இவை தவிரப் பூநகரியின் வடக்கில் நீர்வளத்தைத் தக்கவைக்க வேறு வழியில்லை. மேலும் யாழ்ப்பாணத்துக்கான குடிநீரைக் கிளிநொச்சியிலிருந்து பெறும் ஆய்வில் இந்தக் குடமுறுட்டியும் ஒன்றாகும். இரணைமடு, குடமுறுட்டி, மண்டக்கல்லாறு என்பன யாழ்ப்பாணத்துக்குக் குடிநீரைப்பெற ஆய்வுக்குட்படுத்தப்படவுள்ளன.



கிளிநொச்சியின் மேற்கிலுள்ள குளங்களின் கொள்ளளவு அந்தப் பகுதிகளின் வரட்சியைத் தணிக்கக்கூடியளவுக்கு இரணைமடுவுக்கு இணையான ஒரு தேக்கம் இருந்தால்தான், இந்தப் பகுதி வரட்சியைத் தணிக்கமுடியும். இந்தப் பகுதியிலுள்ள மண்டக்கல்லாறு, பல்லவராயன்கட்டு ஆறு என்பன பருவமழைக்காலத்தில் மிக அதிகளவில் நீரைக் கடலுக்குக் கொண்டுசெல்கின்றன. இவற்றின் படுக்கையில் அதிக நீரைத் தேக்கும் குளங்களும் இல்லை. இதனால் இவற்றின் படுக்கையில் தனித்தனியாகவுள்ள 3 குளங்களை இணைத்து இரணைமடுவுக்கு இணையாக அதன் கொள்ளளவில் மூன்றில் ஒரு பங்கைக் கொண்டதாக இந்த நீர்த்தேக்கம் அமைக்கப்படவுள்ளது. கரியாலை நாகபடுவான் குளம், பண்டிவெட்டிக்குளம், வன்னேரிக் குளம், தேவன்குளம் ஆகிய 4 குளங்களும் அணைக்கட்டுகள் மூலம் ஒன்றாக இணைக்கப்பட, திட்டம் இறுதி செய்யப்பட்டுள்ளது. பல்லவராயன்கட்டு ஆறு, மண்டக்கல் ஆறு, முடக்கன் ஆறு உள்ளிட்ட 6 ஆறுகளின் நீரை இந்தப் பாரிய நீர்த்தேக்கம் தேக்கும். 200 மில்லியன் ரூபா இதற்கு மதிப்பிடப்பட்டுள்ளது. இதன்மூலம் 35 ஆயிரம் ஏக்கர் அளவுக்கு நீரைத் தேக்க முடியும். இதற்கு ஜப்பானின் ஜபிக் நிதி வழுங்க முன்வந்துள்ளது. இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால், கிளிநொச்சியின் மேற்கின் அதி வரண்ட பகுதிகள் வளம்பெறமுடியும். வரட்சியால் இங்கிருந்து மக்கள் இடம்பெயர்கின்ற சூழல் காணப்படுகின்றது. இதைத் தவிர்க்க இந்தத் திட்டம் வேகமாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.

கிளிநொச்சியில் வரைவு செய்யப்பட்ட 14 திட்டங்களுக்கு மொத்தம் 4734 மில்லியன் ரூபா தேவையென மதிப்பிடப்பட்டு ள்ளது. ஆனால், இதற்குக் கிடைத்திருப்பது ஆனைப்பசிக்கு சோளப்பொரி அளவினதாகவேயுள்ளது.

இங்கு வெளிநாட்டு நிறுவனங்கள் நிதி வழுங்கும்போது, பல்வேறு நிபந்தனைகள் அவற்றால் முன்வைக்கப்படுகின்றன. அந்த நிபந்தனைகளை நிறைவேற்றவேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. குறிப்பாகக் காடுகள் அழிவதைத் தடுக்கக் குளங்களின் கொள்ளளவு கூட்டப்படக்கூடாது என்ற உலகப் பொதுவாகவுள்ள கோட்பாடு வலியுறுத்தப்படுகிறது. ஆனால், இங்கு மறுதலையாக அடிப்படையான குடிநீருக்கே கடும் பஞ்சம் இருக்கின்ற சூழலில், இந்த நிபந்தனை பாதிக்கச்செய்யப்போவது மக்களைத்தான். இங்கு குளங்களின் கொள்ளளவு அதிகரிப்புப் பாரிய அழிவுகளை உண்டாக்குமளவுக்குப் பெரியதாக இருக்காது. புதிய குளங்களை அமைக்கும்போதே, பாரிய காடழிவு வரும். இங்கு இருக்கின்ற குளங்களின் கொள்ளளவைச் சிறியளவில் அதிகரித்தலே தேவையானதாகவுள்ளது. இங்குள்ள சூழலைக் கருத்திற்கொள்ளவேண்டும். உண்மையில் கொள்ளளவு அதிகரிப்பு மூலம் நீர் அதிகம் தேங்கி, வரட்சியால் அழிகின்ற காடு, காக்கப்படும். வனவிலங்குகள் காக்கப்படும் என நமது நீர்ப்பாசன நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

வேகமாக அதிக கொள்ளளவுகொண்ட நீர் பாயும் ஆறுகளை மறித்துச் சிறிய நீர்ப்பாசனக் குளங்களை அமைப்பது என்பது நடைமுறைச் சாத்தியமற்றது என்பதையும் அவர்கள் வலியுறுத்துகின்றனர். நாம் வாழ வேண்டுமானால், நீர் அடிப்படைத் தேவை. அதற்கு நடைமுறைச் சாத்தியம் பற்றித்தான் சிந்திக்கவேண்டும். நம்மைப்போன்ற வரண்ட இடங்களில் – நிலத்தாலும், ஆவியாதலாலும் அதிக நீர் குறைவது சிறுகுளங்களில் அதிகமாக இருக்கும். இப்போது இருக்கும் பெரும் குளங்களின் மூலம் சிறு குளங்கள் வளம்பெறும். பெருங்குளங்களின் ஊட்டமில்லாத வன்னியின் சிறுகுளங்கள் அநேகமானவை கோடையில் வரண்டே கிடக்கின்றன. வரட்டுத் தனமான நிபந்தனைகளை எல்லா இடங்களிலும் நடைமுறைப்படுத்தமுடியாது. ✍

தி. தவபாலன்

# நோல்கோல் உற்பத்தி



நோல்கோல், பயிரில் வீங்கிய தண்டுப் பகுதியும், இலையுமே உணவாகப் பயன்படுத்தப்படுகிறது. இதனை நடும்போது பயிர்களுக்கிடையே 15 சென்ரிமீற்றர் இடைவெளிவிட்டு நட வேண்டும். நாற்றுக்களை 3 – 5 வாரப் பருவத்தில் இருக்கும்போது அவற்றைப் பிடுங்கி நாட்டலாம்.

## பசளைப் பிரயோகம்

மேடைகளைத் தயாரித்தவுடன் நன்கு உக்கிய மாட்டெரு அல்லது கூட்டெரு போன்ற சேதன உரத்தைப் பிரயோகித்து, மண்ணுடன் கலந்துவிடவும். வரம்பு அமைப்பதானால் வரம்பை அமைப்பதற்குமுன் சேதனப் பசளை யைப் பிரயோகித்து, மண்ணுடன் நன்கு கலக்கவும்.

## பூச்சிகளும் நோய்களும்

வெட்டுப் புழுவின் பாதிப்பு ஏற்படலாம். உரிய பூச்சிநாசினியைப் பிரயோகித்து விசிறவும். பயிரைச் சுற்றி நிலமட்டத்துக்குக் கீழுள்ள மண்ணில் காணப்படும் புழுக்களைப் பொறுக்கி அழித்தல் வேண்டும்.

நோல்கோல் குண்டாந்தடி நோய்க்கு உட்படக்கூடுமாயினும், அதன் தாக்கம் கோவாவைவிடக் குறைவாகவே இருக்கும்.

இவை புள்ளி நோயின் தாக்கத்தால், இலைகள் சேதமடைந்து உதிர ஆரம்பிக்கும். இந்த நோயை அவதானித்தால், உற்பத்தியாளர்களின் ஆலோசனைகளின் பிரகாரம் பூஞ்சண நாசினியைப் பிரயோகிக்கவும்.

## அறுவடை

நோல்கோல் நாற்று நட்டு 6 – 8 கிழமைகளில் அறுவடை செய்யலாம். தாழ் பிரதேசங்களில் 6 – 7 வாரத்தில் அறுவடை செய்யலாம். வீங்கிய தண்டு நார்த்தன்மையடைய முன்பு அவற்றை அறுவடை செய்வது அவசியம். ✍

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | சங்கானை | சாவகச்சேரி | நெல்லியடி | பருத்தித்துறை |
|---|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 80/= | 90/= | 100/= | 70/= | 70/= | 80/= | 60/= | 90/= |
| வெண்டிக்காய் | 50/= | 60/= | 70/= | 50/= | 50/= | 60/= | 60/= | 70/= |
| உருளைக்கிழங்கு | 100/= | 80/= | 90/= | 110/= | 100/= | 120/= | 120/= | 100/= |
| கத்தரிக்காய் | 70/= | 70/= | 80/= | 100/= | 90/= | 80/= | 80/= | 100/= |
| பாகற்காய் | 120/= | 150/= | 150/= | 120/= | 110/= | 100/= | 60/= | 120/= |
| கரட் | 50/= | 60/= | 70/= | 50/= | 50/= | 80/= | 60/= | 65/= |
| பீற்றூட் | 30/= | 60/= | 70/= | 40/= | 45/= | 60/= | 50/= | * |
| முருங்கைக்காய் | * | * | * | * | * | 200/= | * | * |
| வெங்காயம் | 50/= | 45/= | 50/= | 40/= | 45/= | 50/= | 70/= | 60/= |
| பச்சை மிளகாய் | 220/= | 190/= | 200/= | 180/= | 200/= | 250/= | 220/= | 250/= |

## தொழில்மலர்

# தொழிலில் வெற்றியடைவது உற்பத்தியோடு மட்டும் தொடர்புடையதல்ல



குறைந்த முதலீட்டில் - குறைந்த மனித வளத்துடன் சிறுதொழில்கள் செய்ய முடியும். அவ்வாறான தொழில்களில் ஒன்று மெழுகு வர்த்தித் தொழில். இந்தத் தொழிலை வீடுகளில் ஓர் உப தொழிலாகவும் மேற்கொள்ள முடியும். அத்துடன் இது மிகவும் எளிமையான தொழில். யார் வேண்டுமானாலும் ஆரம்பிக்க முடியும்.

சில மணி நேரங்களிலேயே இந்தத் தொழிலுக்குரிய, தொழில் நுட்ப அறிவைக் கற்றுக் கொண்டு, தொழிலை ஆரம்பித்து விடலாம். நாளடைவில் அனுபவரீதியாக தொழில் நுட்பத்திறனை வளர்த்துக் கொள்ளலாம்.

மெழுகுவர்த்தி தயாரிப்பது மிகவும் எளிமையானது. இதற்காக ஒரு சில மணி நேரங்களைச் செலவிட்டு, மெழுகுவர்த்தி செய்யும் இரகசியத்தைத் தெரிந்து கொள்ள முடியும்.

இவற்றுக்கு முதலில் தேவையானதெல்லாம் என்னால் முடியும் என்ற நம்பிக்கையும் ஆர்வமும் தான்.

இன்றைய வியாபார நிலையில் ஒரு பொருளின் தரம் எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம் அழகும், கண்ணைப் பறிக்கும் வண்ணங்களில் புதிது புதிதான வடிவமைப்பும். எனவே அதற்கேற்றபடி மெழுகு வர்த்திகளையும் தயாரிக்க வேண்டும்.

மெழுகுவர்த்தியை நாங்கள் எவ்வளவு விலையிட்டு விற்பனை செய்யப்போகிறோமோ, அதற்குத் தகுந்த அளவில் உள்ள அச்சுக்கள் மூலம் தயாரிக்கவேண்டும். ஒரு ரூபாயிலிருந்து ஐம்பது ரூபாய் வரையிலான மெழுகுவர்த்திகள் உற்பத்திசெய்து கொள்ளலாம்.

எந்தத் தொழில் செய்தாலும், அதற்கான இடத்தில் தொழிலை ஆரம்பித்து நடத்துவதுதான் சிறந்தது. எனவே சிறிய அளவில் ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து, அனுபவமாகவும், உற்பத்தி செய்வதற்காகவும் வைத்துக்கொள்ளவேண்டும்.

மெழுகுவர்த்தி செய்யும் தொழில் மிகவும் சிறிய அளவிலான தொழிலாக இருப்பதால், எம்மிடம் தனியான இடம் இல்லாத பட்சத்தில் இருக்கும் இடத்தை ஓரளவு சீரமைத்துத் தொழில் செய்ய ஆரம்பிக்கலாம். தொழில் செய்யும் இடத்தை எப்பொழுதும் சுகாதாரமான முறையில் தூய்மையானதாக வைத்துக்கொள்வது நல்லது. அப்படிச் செய்வதன் மூலம் தற்செயலாக வரும் வாடிக்கையாளர்களிடம் எம்மீது ஈர்ப்பை ஏற்படுத்த முடியும்.

தொழில் வெற்றி என்பது உற்பத்தியோடு மட்டும் தொடர்புடையது அல்ல. உற்பத்தி செய்யப்படும் பொருளை வாடிக்கையாளர்களிடம் அறிமுகப்படுத்துவதும், தொழில் வெற்றிக்கு முக்கிய தேவையாகும்.

உற்பத்தி செய்வதிலும், உற்பத்தி செய்த பொருட்களை விற்பனை செய்வதிலும் கவனமாக இருக்கவேண்டும். இப்பொழுது பெரிய நிறுவனங்கள் - நேரடி விற்பனையில் கவனம் செலுத்துகின்றன. அதுபோல நேரடியாகக் கடைகள், வீடுகள் என்று மெழுகுவர்த்திகளைப் பயன்படுத்துபவர்கள் யார் யார் என்பதைத் தெரிந்துகொண்டு, அவர்களின் தேவைக்குத் தகுந்தபடி, அவர்கள் விரும்பிய வகையில் செய்து கொடுக்கலாம்.

அதேநேரம் கடைகள் போன்ற மற்ற வழிகளிலும் வாடிக்கையாளர்களைப் பெறும் முயற்சியில் ஈடுபடலாம். வாடிக்கையாளரின் தேவைகளை மதிப்பிட்டு, அதற்குத் தகுந்தபடி அவர்களிடம்கொண்டு சென்று வழங்கும் முறையிலும் முயற்சி செய்யலாம்.

தொழிலை ஆரம்பிக்க முன்னர் அதுபற்றி சரியாகத் திட்டமிடவேண்டும். திட்டமிடல் சரியாக இருந்தால், தொழில் வெற்றி பெறுவது இலகுவாக இருக்கும். சிறுதொழில் செய்ய உதவி வழங்கும் அரச - தனியார்- தொண்டு நிறுவனங்களை அணுகி, எமது திட்டங்களைப் பற்றியும், செய்யப்போகும் தொழில் பற்றியும் சொல்லி, அவர்களின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளலாம். குறிப்பாகத் தொண்டு நிறுவனங்களில் இருக்கும் ஆர்வமுள்ளவர்களைப் பயன்படுத்தித் தொழில் செய்யலாம்.

அடுத்தபடியாக எந்த இடத்தில் தொழில் புரியப் போகிறீர்கள்? எந்த வகையான வாடிக்கையாளர்களிடம் விற்பனை செய்யப்போகிறீர்கள்? என்பது பற்றித் தீர்மானிக்க வேண்டும். ஏனெனில் வழிபாட்டுத் தலங்களிலும், மின் வசதியுடைய நகர கிராமப் புறங்களிலும் மெழுகுவர்த்திகள் பயன்படுத்தப்படுகின்றன. எனவே தொடர்ச்சியான சந்தை வாய்ப்புக்கள் உண்டு.

மெழுகுவர்த்தித் தொழிலை சிறு மூலதனத்துடன் ஆரம்பிக்க முடியும். என்றாலும் எவ்வளவு முதலீடு செய்யமுடியும். எதிர்பார்க்கின்ற இலாபம், எவ்வளவு என்பதிலும் தெளிவாக இருக்கவேண்டும். உற்பத்தி செய்யப்பட்ட மெழுகுவர்த்தி இலகுவில் பழுதடையும் தன்மையற்றது. எனவே நீண்ட காலத்துக்கு இதனைப் பேணிவைக்கமுடியும். ஆகவே தொழிலை ஆரம்பிக்க முன்னர் பலரிடம் ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளலாம்.

### மெழுகுவர்த்தி உற்பத்தி செய்வதைப் பற்றிப் பார்ப்போம்

மெழுகுவர்த்தி உற்பத்தி செய்தல் மிக இலகுவானதாகும். மூலப்பொருட்களான பரவின் மெழுகு (97 பங்கு), ஸ்டியரிக் அமிலம் (03 பங்கு) நிறுத்தெடுக்கப்பட வேண்டும். இரண்டையும் ஒரு பாத்திரத்தில் இடுதல் வேண்டும். இந்தப் பாத்திரத்தை நீர்நிறைந்த பாத்திரம் ஒன்றினுள் வைத்து, அந்த நீர் நிறைந்த பாத்திரத்தைச் சூடாக்க வேண்டும். மெழுகு உருகித் திரவ நிலையை அடையும்.

மெழுகுவர்த்தி தயாரிப்பதற்கான அச்சின் நடுப்பாகத்தில் திரிக்கான நூலைப் பொருத்த வேண்டும். பின் திரவநிலையிலான மெழுகை விரைவாக அச்சில் ஊற்ற வேண்டும். இந்த அச்சினைப் பின்னர் மெழுகுவர்த்தி இறுகி வரும் வரை, குளிர்ந்த நீர் உடைய பாத்திரத்தில் வைக்க வேண்டும்.

இறுகிய பின்னர், அச்சில் இணைக்கப்பட்டுள்ள நூலைத் துண்டித்து, மெழுகுவர்த்திகளை ஒரு பொதியில் வைக்கலாம். 10 நிமிடங்களில் 40 மெழுகுவர்த்திகளைத் தயாரிக்கலாம். மெழுகுவர்த்தியின் தரம் அச்சில் வார்த்தெடுக்கப்படும் திறனில் தங்கியிருப்பதால், தொழில்நுட்பத்தில் நன்கு கவனம் செலுத்தவேண்டும்.

**கீழுள்ள அட்டவணை, மெழுகுவர்த்தி செய்முறையைக் காட்டுகிறது.**

**மூலப் பொருட்கள்** - பரவின் மெழுகு, ஸ்டியரிக் அமிலம், பருத்தி நூல் இல.10, எரிபொருள், பொதி செய்யும் பொருட்கள்.

**உபகரணங்கள்** - மெகுவர்த்தி அச்சு, தண்ணீர் சூடாக்கும் பாத்திரம், அலுமினிய கொள்கலன் (மெழுகை உருக்குவதற்கு) தராசு, அடுப்பு (காஸ், மண்ணெண்ணெய், விறகு) முதலியனவாகும்.

**முக்கிய குறிப்பு** - பிரதான மூலப் பொருட்களான பரவின் மெழுகு, ஸ்டியரிக் அமிலம் ஆகியன இடையறாது தொடர்ந்து கிடைப்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

மெழுகுவர்த்தித் தொழிலின் தன்மைகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். உற்பத்தி செய்யப்பட்ட மெழுகுவர்த்தி இலகுவில் பழுதடையும் தன்மையற்றது. எனவே நீண்ட காலத்துக்கு இதனைப் பேணிவைக்க முடியுமாகையால், ஒரு குறிப்பிட்ட தொகையை உற்பத்தி செய்து களஞ்சியப்படுத்திவிட்டு, வேறு உப தொழில்களும் மேற்கொள்ளலாம். அத்துடன் இந்தத் தொழிலுக்கு எப்பொழுதும் கேள்வி உண்டு. ஏனெனில், மெழுகுவர்த்தியானது - கொள்வனவு செய்யப்படும் வாடிக்கையாளரால் மிக நீண்ட நாட்களுக்கு சேமிக்கப்படுவதில்லை. மேலும் மெழுகுவர்த்தியை ஒரு முறைதான் உபயோகப்படுத்தமுடியும்.

எனவே, சுயதொழில் ஆரம்பிக்க விரும்புகின்றவர்கள் இதனை ஒரு தொழிலாக ஆரம்பிக்க முடியும்.




# செல்லிடத் தொலைபேசியும் இணையமும் இணைந்துகொண்டனவா?



இன்று தொழில்நுட்ப உலகில் அதன் தகவல் தொழில் நுட்ப முன்னேற்றம் பற்பல நுட்பமான கண்டுபிடிப்புக்களை நாளுக்கு நாள் புதிது புதிதாய் அறிமுகஞ் செய்த வண்ணமே இருக்கின்றன. இதன் ஒரு கட்டமாகவே, கணினியில் மட்டுமே இணையத்தைப் பயன்படுத்த முடியும் என்ற நிலைமாறி, இன்று பல கையடக்கத் தொலைபேசிகளிலும் இணையத்தைப் பயன்படுத்த முடிகிறது.

இந்த தொழில் நுட்பமானது - 'வப்' (**WAP - Wireless Application Protocol**) என அழைக்கப்படுகிறது. செல்லிடத் தொலைபேசியான - கையடக்கத் தொலைபேசியின் திரையானது சிறியதாக அமைந்துள்ளதால், முக்கியமான விடயங்களைச் சுருக்கமாக வெளிக்காட்டும் விதமாக செய்நிரல்கள் எழுதப்பட்டுள்ளன.

இதன் மூலம் நாடுகளுக்கிடையே நடைபெறும் விளையாட்டுப் போட்டிகள் (**ICC** - போட்டி) பங்குச் சந்தை நிலவரம் (இலங்கை - உலகம்) முக்கிய செய்திகள், சிறிய மின்னஞ்சல்கள் போன்றவற்றை உடனுக்குடன் அறிந்து கொள்ளமுடியும்.

இந்த 'வப்' (**WAP**) தொழில் நுட்பமானது - எல்லாக் கையடக்கத் தொலைபேசிகளிலும் பயன்படுத்த முடியாது என்பது ஒருகுறைபாடாகும். இந்தத் தொழில் நுட்பத்துக்கு ஏற்ப உருவாக்கப்பட்ட கையடக்கத் தொலைபேசியில் மட்டுமே பயன்படுத்தமுடியும்

இந்த வப் (**WAP**) தொழில்நுட்பமானது - இணையத் தொழில் நுட்பத்தை ஒத்ததாக இருந்தாலும் இவை இரண்டும் வெவ்வேறு கட்டமைப்பில் தமது செயற்பாட்டை மேற்கொள்கின்றன. இதனால் நாம் சாதாரண இணையப் பக்கத்தில் பார்வையிடும் நிகழ்வுகளைக் கையடக்கத் தொலைபேசியில் பார்வையிட முடியாதுள்ளது.

இதற்காகக் கையடக்கத் தொலைபேசிக்கென்று டபிள்யூ.எம்.எல் **WML - Wireless markup language**) என்ற இணைய மொழி பயன்படுத்தப்படுகின்றது. இந்த டபிள்யூ.எம்.எல் (**WML**) என்ற மொழிக்குரிய பெருமளவான கட்டளைகள், எச்.ரி.எம்.எல். (**HTML- Hyper Text Markup Language**) என்ற மொழி வடிவிலே கொடுக்கப்படுகின்றன. எனினும் இவை சில தேவைக்கு ஏற்ப மாற்றங்களுடன் பயன்படுத்தப்படுகின்றன.

உங்களிடம் இப்பொழுது நொக்கியா (**Nokiya**) அல்லது எரிக்சன் (**Erricson**) போன்ற நிறுவனத் தயாரிப்புக்களான செல்லிடத் தொலைபேசி (கையடக்கத் தொலைபேசி) உள்ளதா? அப்படியானால் நீங்களும் இணையத்தில் இணையலாம்.

தொழில் நுட்ப முன்னேற்றமானது - உலகம் ஒரு கிராமம் எனச் சுருங்கி, இன்று கைக்குள் உலகம் என்ற நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. இன்னும் இனியும், எங்கே போகப் போகின்றதோ உலகம் எனத் தெரியவில்லை.

எஸ்.ஜெயா

# அரசு பனை அபிவிருத்திச் சபையை புறக்கணிப்பது

# தமிழர் அனைவரையும் புறக்கணிப்பதற்குச் சமன்!

## கூட்டமைப்பு எம்.பி. சிவனேசன் தெரிவிப்பு



(ஆழியவளை)

பனை வள அபிவிருத்திச் சபைக்கென ஒதுக்கப்படும் அரச நிதி வெறுமனே பணியாளர் சம்பளத்துடன் முடிவடைகின்ற நிலை கடந்த பல ஆண்டுகளாக காணப்படுகின்றது. தமிழர்களின் ஒரேயொரு சபையாகவுள்ள இந்த அபிவிருத்திச் சபையை - அரசு திட்டமிட்டு புறக்கணிப்பது, தமிழர் தாயக அபிவிருத்தியைப் புறக்கணிக்கும் நடவடிக்கையாகவே அவதானிக்க முடிகிறது என கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவனேசன் கருத்து வெளியிட்டுள்ளார்.

இந்த நடவடிக்கைகளுக்கு தமிழ் அமைச்சு துணை போவது, தமிழர்களுக்குத் துரோகம் இழைக்கும் செயலாகவே அவதானிக்க முடிகிறது. இவ்வாறான நிலை தொடர்ந்து நடைபெறுமானால், இந்தச் சபையானது தமிழ் பேசும் மக்களிடமிருந்து அந்நியப்படும். அவ்வாறு அந்நியப்படும் நோக்கமாகவே தற்போது யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தலைமைச் செயலகத்திலிருந்து உத்தியோகத்தர்கள் கொழும்புக்கு மாற்றப்படுவதும், தலைமைச் செயலகம் கொழும்புக்கு அமையவுள்ளதுமான செய்திகள் - பனம் தொழில்சார் மக்கள் மனங்களில், பனை அபிவிருத்திச் சபை மீது வெறுப்பை ஏற்படுத்தியுள்ளன. பனை அபிவிருத்திச் சபை இவ்வாறான நடவடிக்கையை மேற்கொள்வது தமிழ்த் தேசிய விருட்சம் ஒன்றின் அபிவிருத்தி பற்றிச் சிந்திக்காத நிலைமையும் தமிழர் தாயக நிலப்பரப்பின் அபிவிருத்தியையும் விரும்பாத போக்கையே காட்டி நிற்கின்றது.

எனவே, பனை அபிவிருத்திச் சபையின் தலைமைச் செயலகம் தமிழர் தாயக நிலப்பரப்பிலேயே இயங்கவேண்டும். இதன்மூலம் தமிழர் தாயகத்தில் பரந்து நிறைந்திருக்கின்ற பனை வளமும், அதனைப் பயன்படுத்தும் மக்களும் அபிவிருத்தி அடையக்கூடிய செயற்பாடுகள் இந்தச் சபையால் மேற்கொள்ளப்படவேண்டும்.

இந்தச் சபை பனை வளத்தைத் தமது ஜீவனோபாயமாகக் கொண்ட 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர் பிரதேசத்தில் வாழ்கின்ற பயனாளிகளைப் பின்பற்றி எள்ளளவும் சிந்திக்காது இருப்பது தமிழர் தாயகத்தில் ஓர் பனை அபிவிருத்திச் சபையை உருவாக்கத் தூண்டும் நடவடிக்கையாகவே அமைகின்றது.

எனவே, பனை அபிவிருத்திச் சபையின் தலைமைச் செயலகம் தமிழர் தாயக நிலப்பரப்பிலேயே இயங்கவேண்டும். இதன் மூலம் தமிழர் தாயகத்தில் பரந்து நிறைந்திருக்கின்ற பனை வளமும் அதனைப் பயன்படுத்தும் மக்களும் அபிவிருத்தி அடையக்கூடிய செயற்பாடுகள் இந்தச் சபையில் மேற்கொள்ளப்படல் வேண்டும். இந்த நிலையில் இருந்து பனை அபிவிருத்திச் சபை மாறுபட்டு கொழும்பில் தலைமை அலுவலகத்தை வைத்து செயற்படுமேயானால், தமிழர் தாயகத்தில் தனியான பனை அபிவிருத்திக்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் நிறுவனம் ஒன்று உருவாவது உறுதியாக்கப்பட்டுவிடும். இதனைப் பனை அபிவிருத்திச் சபை வழி நடத்தும் அமைச்சும் பனை வள அபிவிருத்தியைப் புறக்கணித்து வரும் இலங்கை அரசும், கவனத்தில் எடுக்கவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (122)




### உப மருந்தாளர் பயிற்சிநெறி பிற்போடப்பட்டது

நல்வாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில் தமிழீழ சுகாதார சேவையினரால் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் உப மருந்தாளர் பயிற்சிநெறி மழை காரணமாகப் பிற்போடப்பட்டுள்ளது.

மறு அறிவித்தல்வரை இந்த வகுப்புக்கள் நடைபெறமாட்டாது என்று பயிற்சியாளர்களுக்கு நல்வாழ்வு அபிவிருத்தி நிறுவனம் அறிவித்துள்ளது.

## கட்டைக்காடு கிராமத்தில்

# தாய் - சேய் வைத்திய சிகிச்சை இந்த மாதம் நடைபெறவில்லை!

(கிளிநொச்சி)

கட்டைக்காடு கிராமத்தில் ஒவ்வொரு மாதமும் வெள்ளிக்கிழமைகளில் நடைபெற்று வந்த தாய் - சேய் வைத்திய சிகிச்சை இந்த மாதம் நடைபெறவில்லை.

மழை காரணமாக கடற்கரை வீதி முற்றாகச் சேதமடைந்திருந்த காரணத்தினால் சிகிச்சை வழங்கும் வைத்தியர் மற்றும் சுகாதார திணைக்கள ஊழியர்கள் வாகனத்தில் செல்ல முடியாத நிலை ஏற்பட்டமையால் மருதங்கேணி கிராமிய வைத்தியசாலையில் தாய் சேய் நலசிகிச்சைகள் மற்றும் குழந்தைகளுக்கு ஊசி போடுதல் போன்றவை நடைபெறவில்லை.

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தின் எல்லைக் கிராமங்களான பூனைத்தொடுவாய், கேவில், போக்கறுப்பு, கட்டைக்காடு, நித்திய வெட்டை வெற்றிலைக்கேணிக் கிராமத்திலுள்ள கர்ப்பிணித்தாய்மார் குழந்தைகளுககு ஊசிபோடுதல் போன்றவற்றுக்காக சுமார் 12 கிலோ மீற்றர் தூரம் கால் நடையாகவே வருவது குறிப்பிடத்தக்கது. (21)

# தாண்டிக்குளம் இராணுவத்தினரின் உணவகத்தால் பெரும் அசௌகரியம்!

வவுனியா மாவட்ட தாண்டிக்குளம் பகுதியில் இராணுவத்தினரால் நடத்தப்படும் உணவகத்தால் பொதுமக்கள் பெரும் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த உணவகத்தில் நிற்கும் படையினர் வீதியால் செல்லும் பெண்களைக் கிண்டல் செய்வதாகவும் அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதைவிட இரவுவேளையில் உணவகத்தில் கூடும் படையினர் மது போதையில் ஏற்படுத்தும் கூக்குரல்களால் அப்பகுதி மக்கள் பெரும் அசௌகரியங்களை சந்திக்கின்றனர்.

இந்த உணவகம் மக்கள் செறிந்து வாழும் பகுதியில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முல்லைத்தீவு மல்லாவி பிரதேசத்தில் கரும்புலிகள் நினைவு மண்டபம்!

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - மல்லாவியில் புதிதாக அமைக்கப்பட்ட கரும்புலி மாவீரர்களின் நினைவு மண்டபம் நேற்றுமுன்தினம் மாலை 2 மணிக்குத் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நினைவு மண்டபம் வர்த்தகர் சிவானந்தனால் அமைக்கப்பட்டு, தாயக விடுதலைக்குத் தங்களை நெருப்பாக்கி உரமூட்டிய கரும்புலி மாவீரர்களின் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு துணுக்காய் அரசியற்துறையைச் சேர்ந்த வே. தனம் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன், தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர், தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா, வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வின் நினைவுரையை முல்லைத்தீவு மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர் சி.வேதவனம் நிகழ்த்தினார். நன்றியுரையை முல்லைத்தீவு வர்த்தக சங்கச் செயலாளர் தனுராஜ் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன், தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர், தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா, வன்னி நாடாளுன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், முல்லைத்தீவு மாவட்ட நிர்வாக சேவைப பொறுப்பாளர் முரளி, முல்லைத்தீவு பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் செ.புனிதன் மற்றும் போராளிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த நினைவு மண்டபம் வர்த்தகர் சிவானந்தனால் அமைக்கப்பட்டு, தாயக விடுதலைக்குத் தங்களை நெருப்பாக்கி உரமூட்டிய 263 கரும்புலிகளின் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்டுள்ளன.

### சுவர் இடிந்து சிறுமி காயம்!

புதுக்குடியிருப்பு - தேவிபுரம் பகுதியில் வீட்டின் சுவர் இடிந்து வீழ்ந்ததில் சிறுமி ஒருவர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. வீட்டின் சுவர் இடிந்து வீழ்ந்ததினாலே சிறுமி காயமடைந்தார்.

இந்த சம்பவத்தில் ராஜ்குமார் அனுராதா (வயது 9) என்ற சிறுமியே காயமடைந்தவர் ஆவார்.

### 3 ஆயிரம் நுளம்புவலைகள் வழங்கல்

வவுனியா வடக்குப் பிரதேச மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் தொண்டர் நிறுவனத்தின் நிதியுதவியுடன் நுளம்பு வலைகள் வழங்கப்பட்டன.

நயினாமடு, பரந்தன், ஆனந்தர் புளியங்குளம் போன்ற கிராம சேவகர் பிரிவின் கீழுள்ள மக்களுக்கு 3 ஆயிரம் நுளம்பு வலைகள் வழங்கப்பட்டன.

### குன்றும் குழியுமாக காணப்படும் வீதிகள்

வவுனியா வடக்கு கரப்புக்குத்தி விஞ்ஞான குளம் வீதியும், இந்த வீதியூடாக கனகராயன் குளம் செல்லும் வீதியும் மிக நீண்ட காலமாக புனரமைக்கப்படாத நிலையில் பாரிய குன்றும் குழியுமாக காணப்படுவதனால் இந்த வீதியால் பயணிக்கும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

இந்த வீதியை சம்பந்தப்பட்டவர்கள் கருத்திற்கொண்டு புனரமைக்குமாறு அந்த பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (21)



ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவன நிதியுதவியுடன் வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால், தாளையடிப் பகுதியில் கட்டப்படவிருக்கும் குளிரூட்டி அறைக் கட்டடத்திற்கு ஜி.ரி.இசற் திட்டப் பொறியியலாளர் சு.பரராசசேகரம் அடிக்கல் நாட்டுவதைப் படத்தில் காணலாம். (21)

# வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் மாவீரர் நாளை சிறப்பாகக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை மாவீரர் நாள் ஏற்பாட்டுக் குழுவினர் சிறப்பாகச் செய்து வருகின்றனர்.

கடற்புலிகளின் அரசியற்துறைச் செயலகங்கள், பொது ஸ்தாபனங்கள், அரச - அரசசார்பற்ற நிறுவனங்கள், கடைகள், வீதிகள் என்பனவற்றில் - சிவப்பு, மஞ்சள், நீல நிறக்கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு வீதியின் முக்கிய இடங்களில் வளைவுகளும் நிறுவப்பட்டுள்ளன.

மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிப்பு நிகழ்வு இன்று உடுத்துறை மகா வித்தியாலயத்தில் நடைபெறவிருப்பதுடன், மாலை வித்தியாலய கலை அரங்கில் கலைநிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

உடுத்துறை மாவீரர் துயிலும் இல்லம் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யும் பணிகள் நாள்தோறும் நடைபெற்று வருகின்றது. (21)

# முல்லைத்தீவு பிரதம அஞ்சலகத்தில் மின்சார வசதியின்றி பெரும் சிரமம்

முல்லைத்தீவு மாவட்ட பிரதம அஞ்சல் அலுவலகம் இருளில் மூழ்கியுள்ளமையால், காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரையும் அஞ்சல் அலுவலக வேலைகள் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், அஞ்சல் பொதிகள் கட்டுவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இராணுவ நடவடிக்கை காரணமாக இந்தப் பிரதம அஞ்சல் அலுவலகக் கட்டடம் முற்றாகச் சேதமடைந்தது.

இதன் பின்னர் இடம்பெயர்ந்து புதுக்குடியிருப்பில் இயங்கி வந்த இந்த அலுவலகம் 23.05.2003 ஆம் திகதி தொடக்கம் முல்லைத்தீவிலுள்ள தனியார் ஒருவருக்குச் சொந்தமான வீட்டில் இயங்கி வருகிறது.

இந்த வீட்டின் உரிமையாளர் வீட்டிற்குரிய உரிய ஆவணங்களை ஒப்படைக்காமையால் அஞ்சல் திணைக்களம் அவருக்குரிய மாதாந்த வாடகைப் பணம் செலுத்த முடியாத நிலையிலுள்ளது.

வீட்டின் உரிமையாளர் மின்சாரக் கட்டணம் செலுத்தாத காரணத்தால் அஞ்சல் அலுவலகத்தின் மின் இணைப்புத் துண்டிக்கப்பட்டுள்ளது.

இதனால் அஞ்சல் அலுவலகத்தின் நாளாந்த வேலைகளை அஞ்சல் அலுவலக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் சிரமத்தின் மத்தியில் செய்துவருகின்றனர். (21)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை*
*முறைகாக்கும் முட்டாச் செயின்*

திருக்குறள்

# நமது நோக்கு

## ஜனாதிபதியின் வியூகங்களும் விளைவுகளும்...

'அவதந்திரம் தனக்கந்தரம்' என ஒரு பழமொழியுண்டு. இன்று ஜனாதிபதி சந்திரிகாவின் நிலையும் அப்படியான தன்மைகொண்டதாவே மாறிக்கொண்டு வருகின்றது. இன்றைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கூட்ட ணியை ஆரம்பிக்க முன்னரேயே ஜனாதிபதி குறுகிய அரசியல் இலாபங்களை எட்டும் நோக்கிலான தந்திரோபாயங்களைக் கையாண்டும், சந்தர்ப்பவாத சமரசங்களை கருத்து மற்றும் கொள்கை ரீதியிலான முரண்நிலை கொண்டவர்களுடன் ஏற்படுத்திக்கொண்டும், தனது அரசியல் சதுரங்கத்தை ஆடத்தொடங்கியபோதே அவரின் அரசியல் மூலோபாயங்கள் தொலைநோக்கு சிந்தனையற்றவை என்பதை அரசியல் நோக்கர்கள் தெளிவாகப் புரிந்து கொண்டு, அவரின் நடவடிக்கைகளை கடுமையாக விமர்சிக்க ஆரம்பித்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சமாதான விரோதிகளையும், சந்தர்ப்பவாதிகளையும் கூட்டணியில் இணைத்து அவர்களின் நிபந்தனைகளையும் கோரிக்கைகளையும் ஏற்று - பின்னால் இவர்களைச் சமாளித்துக்கொள்ளலாம் என்ற அவரது வழமையான 'பேய்க்காட்டும்' உத்தியைக் கையாண்டு, தேர்தலை எதிர்கொள்ள அவர்முனைந்தபோது - தான் மற்றவர்களுக்கு விரித்த வலையில் தானே சிக்கிக்கொண்டு தவிக்க நேரிடும் என அவர் கனவிலும் எண்ணியிருக்க மாட்டார்.

தேர்தல் வெற்றி ஒரு வலுவான ஆட்சியை அமைக்கும் அறுதிப்பெரும்பான்மை பலத்தை அவருக்கு அளிக்கவில்லை என்பது ஒரு புறமிருக்க, கட்சிக்குள்ளும், அரசுக்குள்ளும் தனது பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. பலம்மிக்க ஒன்றாக விஸ்வரூபமெடுத்து நிற்கும் என்றும் அவர் எண்ணியிருக்கவில்லை.

இதுவே அவருக்கு - அவர் எதிர்காலத்தில் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் சகல அரசியல் நெருக்கடிகளுக்கும் காரணமாக இருக்கப்போகிறது என்றும் அவர் நினைத்திருக்கமாட்டார்.

இப்போது அவர் எதிர்பாராததையெல்லாம் எதிர்கொள்ள வேண்டியுள்ளமை அவரது அரசியல் தீர்க்கதரிசனமின்மையின் வெளிப்பாடாகவே உள்ளது.

விரும்பியோ விரும்பாமலோ சமாதான முயற்சிகளை ஒரு நடிப்புக்காகவேனும், காலங்கடத்தும் முயற்சியாகவேனும் கையாளவேண்டிய நிலையில் இருக்கும் அவருக்கு - ஜே.வி.பியே பெரிய எதிர்ப்புசக்தியாக அரசையும், தன்னையும் மிரட்டி அச்சுறுத்தும் பலங்கெண்டதாக உருவாகிநிற்பது சகிக்கவோ, சமாளிக்கவோமுடியாத விடயமாகவே உள்ளது.

தேசம் எதிர்கொண்டு நிற்கும் பாரிய பொருளாதார பிரச்சினையைச் சமாளிக்கவும், சமாதானத்தை வலியுறுத்தும் சர்வதேச அழுத்தத்தை எதிர்கொள்ளவும் விடுதலைப் புலிகளுடன் பேசியே தீரவேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கும், ஜனாதிபதிக்கும் ஏற்பட்டுள்ள சூழலில், ஜே.வி.பி. அதற்கு புரிந்துணர்வுடன் கூடிய ஒத்துழைப்பை வழங்கத் தொடர்ந்தும் மறுத்துவருவது நெருக்கடிகளை மீண்டும் தீவிரப்படுத்தவே வழிசெய்துள்ளதெனலாம்.

இந்த நிலையில், ஏற்கனவே சமாதான முயற்சிகள் தொடர்பாக, குறிப்பாக இடைக்கால நிர்வாக அதிகார சபை விடயம் தொட்டு, பேச்சுக்களை விடுதலைப் புலிகளுடன் ஆரம்பிக்க பூரண ஒத்துழைப்பைத்தர வெளிப்படையாகவே முன்வந்து அறிவித்த ஐக்கிய தேசியக் கட்சி, ஜனாதிபதியின் நேர்மையற்ற தந்திரோபயங்கள் காரணமாக அரசுக்கு ஆதரவளிக்குமாறு ஜனாதிபதி விடுத்த வேண்டுகோளை அடியோடு நிராகரித்துள்மையானது - சமாதான ஆர்வலர்களுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களை தமது ஆளுங் கட்சிக்குள் இழுத்து, ஆளும் ஐ.ம.சு.முன்னணியின் அறுதிப்பெரும்பான்மையை நிரூபிக்க முயலும் ஜனாதிபதியின் முறையற்ற, மறைமுக முயற்சிகள் ஐ.தே.கட்சிக்கு சினத்தை ஏற்படுத்தியதில் வியப்பில்லை. முன்னர் ஐ.தே.கட்சி அறிவித்த சமாதான முயற்சிகளுக் கான ஆதரவு நிலையுடன் மேலும் சில விடயங்களிலும் ஆதரவு நல்குமாறு ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்திருந்தார்.

ஆனால், அரசியல் அமைப்பினை தனது அரசியல் எதிர்காலத்துக்குச் சாதகமானதாக மாற்றியமைக்கவும், ஐக்கிய தேசியக் கட்சியை உடைத்து சில உறுப்பினர்களை தம்வசம் இழுக்கவும், வியூகங்களை அமைத்தவாறு ஆதரவு கோரியும், வேண்டுகோள் விடுக்கும் ஜனாதிபதியின் நேர்மையில் ஐ.தே.கட்சிகக்கு சந்தேகம் ஏற்பட்டதில் வியப்பில்லை.

ஜனாதிபதி எல்லா வகையிலும் ஒரு தந்திரசாலியாகவே தன்னைத் தொடர்ந்தும் இனங்காட்டி வருவதே - அவரின் மிக மோசமான பலவீனமாகிவிட்டுள்ள நிலையில், வெறும் அதிகாரங்களை மட்டும் வைத்துக்கொண்டு, வெறுங்கையால் முழம்போட நினைப்பது பரிதாபத்துக்குரிய நிலைக்கே நாட்டின் எதிர்காலத்தை தள்ளிச்செல்லப்போகின்றது என்பது உறுதி.

## நாடும் நடப்பும்




# மாவீரரின் பெற்றோரை கௌரவித்து எம்மை நாம் உயர்த்திக் கொள்வோம்

### வலி.மேற்கு அரசியற் பொறுப்பாளர்

தமிழ் மக்களுக்குரிய சுதந்திரம், தன்னாட்சி உரிமை கொண்ட நாடு, வெகுவிரைவில் எமது தேசியத் தலைவர் பிரபாகரன் காலத்திலேயே கிடைக்கும். மண்ணுக்காக இன்னுயிர் நீத்த பதினெட்டாயிரம் மாவீரர்களின் கனவு, நனவாகி எமக்கொரு தேசத்தை நாம் உருவாக்கியே தீருவோம். மாவீரர்களின் நினைவு நாளை அனுஷ்டிக்கும் நாம் அந்தக் காலத்திலேயே ஒவ்வொரு வருடமும் எமது தலைவரின் பிறந்தநாளையும் கொண்டாடும் வாய்ப்பையும் பெற்றுள்ளோம். தமிழீழத்திலே வாழும் தமிழ்மக்கள் மட்டுமன்றி, உலகெங்கும் வாழும் தமிழ் மக்களையும் ஆளுகின்ற ஆளுமையும், வீரமும், கொண்டவர் எமது தேசியத் தலைவர் பிரபாகரன் என்று

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற வலி.மேற்கு பிரிவில் இன்னுயிர் நீத்த மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் விழாவில் உரையாற்றிய நோர்வே நாட்டில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயற்பாட்டுக் குழுச் செயலாளர் ஆ.விவேகானந்தன் தெரிவித்தார்.

என் மனம் ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறது. மாவீரர் எழுச்சி நாள் மக்களின் மனதில் எவ்வாறு எழுச்சியையும்-உணர்வையும் ஊட்டுகின்றது என்பதை எண்ணிப் பார்க்கும் போது, எமது விடுதலை வெகுதூரத்தில் இல்லை, கைக்கெட்டிய தூரத்திலே இருக்கிறது. அதனைப் பெற்றுத்தரும் எமது தேசியத் தலைவர் கரத்தை வலுப்படுத்தும் சக்தியாக மக்கள் உள்ளார்கள். மாவீரர்களின் தியாகம் வீண்போகாது.

இன்று மாவீரர் நாளின் இறுதியில் தலைவர் பிரபாகரனின் மாவீரர் உரையை அவதானிப்பதற்கு இந்தியா- அமெரிக்கா மட்டுமல்ல இலங்கையின் சர்வாதிகாரி சந்திரிகா அங்கலாய்த்தவண்ணம் உள்ளது. உலகமே அந்த உரையைக் கேட்பதற்கு ஆயத்தமாக உள்ளனர். எம் தலைவரின் இந்த உரைக்காகக் காத்திருக்கின்றது ஏன்? தமிழ் மக்களின் விடிவுக்காகவும், சுதந்திரத்துக்காகவும், தலைவர் என்ன சொல்லப் போகிறார்? மாவீரர்களின் தியாகத்தை எப்படி உளப்பூர்வமானமுறையிலே உரைமூலம் எடுத்துக் காட்டப் போகிறார்? என அங்கலாய்த்தபடி உலகமே எதிர்பார்த்து நிற்கிறது எனத் தெரிவித்தார்.

வலி.மேற்கு அரசியற்துறைப் பொறுப்பாளர் அ.அன்பு இந்த நிகழ்வில் கலந்து உரையாற்றும் போது, உயிரின் பெறுமதியை எல்லோரும் அறிந்திருப்பர். அந்த உயிரையே தாய்நாட்டுக்காக அர்ப்பணித்தவர்கள் மாவீரர்கள். ஒரு தேசத்தை உருவாக்குவதற்காக இழக்கமுடியாத உயிரையே இழந்து, மாவீரர்கள் ஆகிய இவர்களை நாம் கௌரவிக்காவிட்டால் எம்மையே நாம் தாழ்த்திக் கொள்வோம். (48)

## சுன்னாகம் மின்சார சபையில் பொதுமக்கள் முறைப்பாடு

இலங்கை மின்சாரசபை ஊழியர்கள் மின்சார வயர்களில் முட்டிக்கொண்டிருக்கும் தடிகளைத் தாறுமாறாக வெட்டி வீழ்த்துவதால், தாம் பெரிதும் பாதிக்கப்படுவதாக சுட்டிக் காட்டி, உடுவில் பகுதி மக்கள் சுன்னாகம் மின்சார சபைக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

இது பற்றி, பொதுமக்கள் கருத்துத் தெரிவிக்கையில் மின்கம்பிகளில் முட்டுகின்ற தடிகள் வெட்டப்பட வேண்டியது அவசியம் தான். இதனை ஒரு மாதத்துக்கு முன்னர் பாவனையாளருக்கு தெரியப்படுத்தினால் தாமே பக்குவமாக வெட்டி, அப்புறப்படுத்தலாமென்றும் மின்சார சபை ஊழயர்களால் தடிகள் வெட்டப்படும்போது, அடிமரம் பாதிப்படைவதுடன், புதிதாக அடைத்த வேலிகளை - இவர்கள் வெட்டும் தடிகள் வீழ்ந்து பாதிககச் செய்கிறது. இதனால் அதிக கூலி கொடுத்து அடிக்கடி தங்களால் வேலி அடைக்க முடியாதெனவும், அடுத்த வருடத் தேவைக்கு கதியால் பெறமுடியாது போவதாகவும் முறைப்பாடு செய்துள்ளனர்.

காய்க்கின்ற சிறிய தென்னை மரங்களின் ஓலைகளை வீடுக்குக் கிட்டவாக வெட்டுவதால் காய்கள் வெம்பி விழுவதுடன், மரம் பட்டுப்போகவும் ஏதுவாகிறது.

எனவே சூழல் அபிவிருத்திக்குக் கை கொடுத்து உதவும் மின்சாரசபை தமது இந்த நியாயமான வேண்டுகோளைப் புறந்தள்ளாது இனி வருங்காலங்களில் மக்களுடன் ஒத்துழைக்க வேண்டுமெனக் கேட்டு கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (101)

## சுண்டுக்குளி கிளை நூலகம் பொது நூலகத்துடன் இணைகிறது

யாழ். பொது நூலகத்தின் சுண்டுக்குளி கிளை நூலகம் இந்த மாதம் 30 ஆத் திகதியுடன் மூடப்பட்டு, யாழ். பொது நூலகத்துடன் இணைகிறது.

இந்தக் கிளை நூலகமானது - கடந்த காலங்களில் சிறப்பான முறையில் செயற்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. சுண்டுக்குளி, அரியாலை மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்கள், பொதுமக்கள் என பலதரப்பினரும இந்த நூலகத்தால் பயனடைந்து வந்தனர். வாசகர்களின் வரவு குறைவானதாக இருப்பதாலேயே நூலகம் மூடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இந்த நூலகம் மூடப்படுவது குறித்து, இந்தப் பகுதியைச் சேர்ந்த சிலர் கவலை தெரிவித்துள்ளனர். (த)

## கிராம அலுவலர்களுக்கான மோட்டார் சைக்கிள் கொள்வனவுக்கு வழங்கப்படும் கடன் தொகை அதிகரிப்பு

கிராம அலுவலர்களுக்கு மோட்டார் சைக்கிள் கொள்வனவுக்காக வழங்கப்பட்டு வரும் கடன் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் கிராம அலுவலர்கள் தமது வெளிக்களத் தேவைக்குப் பயன்படுத்துவதற்கு, மோட்டார் சைக்கிள் கொள்வனவு செய்வதற்கு 50 ஆயிரம் ரூபாவே கடனாக வழங்கப்பட்டுவந்தது. இந்தத் தொகை ஒரு லட்சம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டு அலு வல்கள் அமைச்சு தெரிவித்தது.

அண்மையில் கிராம அலுவலர் தொழிற்சங்க அதிகாரிகளுக்கும், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு அதிகாரிகளுக்கும் இடையிலான கலந்துரையாடலை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (122)

## இந்திய மீனவர்களின் அத்துமீறல் மீண்டும் நெடுந்தீவில் அதிகரிப்பு

(நெடுந்தீவு)

கடந்த சில நாட்களாக ஓய்ந்திருந்த இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல்கள் அண்மைக் காலமாக நெடுந்தீவு கடற்பிரதேசத்தில் காணப்படுகிறது.

கரைக்கு மிக அண்மையில் வந்து இழுவைத் தொழிலில ஈடுபடும் இந்தியப் படகுகள் - உள்ளூர் மீனவர்களின் வலைகளை வெட்டிச் சேதமாக்குவதுடன், களவாடியும் சென்று விடுகின்றனர். இந்திய மீனவர்களின் அச்சுறுத்தல்களால் இந்தப் பகுதி மீனவர்கள் கடற்தொழிலுக்குச் செல்ல அஞ்சுகின்றனர்.

இந்திய இழுவைப் படகுகள் நெடுந்தீவு, புங்குடுதீவு ஆகிய கடற்பகுதியூடாக ஊடறுத்து கரைக்குச் சமீபமாக வந்து, தொழில் செய்வதால் இந்தப் பிரதேசத் தொழிலாளர்களின் தொழில் வெகுவாகப் பாதிப்பதுடன் இந்தப் பகுதி மீனினங்கள், மீன் வாழ்விடங்கள் அழிக்கப்படுகின்றன.

இது சம்பந்தமாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நெடுந்தீவு உதவி அரச அதிபர், நெடுந்தீவு பங்குத் தந்தை, நெடுந்தீவு அரசியற்துறைப்பொறுப்பாளர், தீவுப்பகுதிச் சமாசம், யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்கள் சமாசம் ஆகியோருக்கு மகஜர் அனுப்பியுள்ளனர். (21)

அருண்பிரசாத்

# கைக்குண்டுகளை கேடயமாக புலிகள் பயன்படுத்தினர்

'ஒரு விடுதலை வீரனின் சாவு சாதாரண நிகழ்வு அல்ல, சரித்திர நிகழ்வு. உன்னத இலட்சியம் உயிர்பெறும் அற்புதமாகும் நிகழ்வு. அவனது உயிராக இயங்கி வந்த இலட்சிய நெருப்பு வரலாற்றுச் சக்தியாகி, இனத்தின் தேசிய ஆன்மாவைத் தட்டி எழுப்பி விடுகிறது'.

மேற்கண்டவாறு தலைவர் வே.பிரபா கரன் மாவீரர்கள் புரியும் மகா தியாகம் பற்றிப் பொருள் பொதிந்த வார்த்தைகளால் அவர்களை ஆராதனை செய்கிறார்.

அவரது ஆத்மார்த்தமான வார்த்தைகளுக்கு இன்று பல வேங்கைகள் பொருளாகி நிற்கின்றனர். மட்டக்களப்பைச் சேர்ந்த இரண்டு போராளிகள் (இருவரும் சகோதர்கள்) ஒரு நாள் குளிப்பதற்காக ஆற்றுக்குச் சென்றார்கள்.

விசேட அதிரடிப்படை அவர்களை எதிர்பாராமல் சுற்றிவளைத்துக் கொண்டது. தாக்குதல் ஒன்றை நடாத்திவிட்டு, அங்கிருந்து தப்பித்துக்கொள்ள வாய்ப்பில்லை.

ஒரு கணம் ,லெப்.ரவிக்குமார் (யோகராசா) யோசித்தான். தன்னிடமிருந்த துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டுக்கொண்டால், அதன் பின்னர் தனது தம்பி எதிரியிடம் சிக்கிவிட்டால், அது விடுதலை இயக்கத்துக்குப் பங்கத்தை ஏற்படுத்தி விடுமே என எண்ணினான்.

தன்னைத்தானே சுதாரித்துக்கொண்டு, ஒரு முடிவுக்கு வந்தான். இதற்கிடையில் அவனது தம்பியும் தன்னைச் சுடும்படி அண்ணனிடம் கெஞ்சிக்கேட்டுக்கொண்டான்.

தனது கையாலேயே தூக்கி வளர்த்த தன் உடன்பிறப்பான போராளி அன்ரனி யை - தனது கையில் இருந்த கைத்துப பாக்கியால் சுட்டுவிட்டு, பின்னர் அந்த வீரவேங்கை தன்னைத்தானே சுட்டு வீரமரணத்தைத் தழுவிக் கொண்டான்.

இருவரையும் உயிரோடு பிடித்துவிட முயன்ற விசேட அதிரடிப்படையின் முகத்தில் அசடு வழிந்தது. சகோதர பாசங்களை எல்லாம் மேவி நின்றது, அவர்கள் இருவரும் இயக்கத்தின் இலட்சியத்தின் மீதுகொண்ட நம்பிக்கை. இலட்சியம் உயிர்பெற்று எழுந்த அற்புதமான நிகழ்வு- இரு மாவீரர்களதும் தியாகத்தால் வரலாறாகி விட்டது.

விடுதலைப் புலிகளின போராட்ட வளர்ச்சிக்கு இன்னுமொரு காரணம்- போர்க் கருவிகளை உள்ளூரிலேயே உற்பத்தி செய்த தீர்க்க தரிசனமான செயறபாடாகும். ஜொனிவெடி போன்ற தாக்கமுள்ள மிதிவெடிகள், கைக்குண்டுகள், அருள் 89 போன்ற சிறுகணைகள், பசிலன் -2000, கணேஷ் -86 போன்ற சிறு பீரங்கிகள் விடுதலைப் புலிகளின் சொந்தத் தயாரிப்புக்களாகும். இவற்றை எதிரிகளுக்கு எதிராகப் பயன்படுத்தும் அதேவேளையில், கைக்குண்டுகளைத் தம்மைக் காக்கும் கேடயமாகவும், விடுதலைப் புலிகள் பயன்படுத்தி வருகிறார்கள்.

சுற்றிவளைப்புகளின்போது கைக்குண்டின் கிளிப்பைக் கழற்றித் தமது வயிற்றிலோ, நெஞ்சிலோ வெடிக்க வைத்து, எதிரியிடம் பிடிபடாது, அவர்கள் வீரமரணத்தைத் தழுவிக்கொள்கிறார்கள்.

1986 ஆம் ஆண்டு அம்பாறையில் லெப. சுந்தரும், 1988 ஆம் ஆண்டு முல்லைத்தீவில் வீரவேங்கை அத்தார் (நாகலிங்கம் தர்மசிங்கம்) போன்ற பல போராளிகளும் இவ்வாறு செய்து, வீரமரணத்தைத் தழுவிக் கொண்டார்கள்.

இதேபோல நெஞ்சையுருக்கும் இரு சமபவங்கள் சிங்களப்படைகளதும், இந்திய ஜவான்களதும் தேடுதல் நடவடிக்கையின் போது இடம்பெற்றன.

11.03.1986 அன்று துணுக்காயில், சிங்களப் படைகளின் சுற்றி வளைப்பின்போது தம்மிடமிருந்த சகல ஆயுதங்களையும் எதிரிக்கு எதிராகப் பயன்படுத்திய பின் - தம்மிட மிருந்த ஒரு கைக்குண்டின் கிளிப்பை கழற்றி, தமது அடி வயிற்றில் வைத்து வெடிக்கச் செய்து, இணைபிரியா நண்பர்களான வீரவேங்கை ரஞ்சனும் (சத்தியசீலன் - வவுனிக்குளம்), வீரவேங்கை ஜீவனும் (கங்காதரன் - பெரியதம்பனை) வீரமரணத்தைத் தழுவிக்கொண்டனர். இவர்கள் இருவரையும் உயிருடன் பிடித்து வட முயன்ற சிங்களச் சிப்பாய்கள் - இவர்கள் அருகே வந்து பார்த்தபோது விறைத்துப்போய் நின்றார்கள்.

இதேபோல வல்வெட்டித்துறை மானாங்கானை என்ற இடத்தில் இந்தியப் படைகளால் 20.05.1988 அன்று சுற்றிவளைக்கப்பட்ட நிலையில் 2ம் லெப் ஜீவா (தம்பிராசா சத்தியமூர்த்தி - வல்வெட்டித்துறை), வீரவேங்கை ஜெயம் (துரைசிங்கம் சிறிதரன் - வல்வெட்டித்துறை) ஆகிய இரண்டு போராளிகளும் தம்மிடம் இருந்த ஒரே ஒரு கைக்குண்டை தமக்கிடையே வெடிக்கச்செய்து வீரமரணத்தைத் தழுவிக்கொண்டனர்.

ஒரு போராளியின் வாழ்வும், அவன் கொண்ட இலட்சியமும் - எண்ணெயும், திரியும் போன்று ஒன்றுடன் ஒன்று ஊறிக் கொண்டுள்ளது. இலட்சியம் என்ற அந்தத் திரியில் தியாகம் - சுடர்விட்டுப் பிரகாசிககும்போது அவனது வாழ்வு மற்றவர்களுக்கு ஒளியைத் தந்து இலட்சியப் பயணத்துக்கான வழியைக் காட்டுகிறது. இதற்கு ஒவ்வொரு மாவீரனதும் தியாக வாழ்வும், வீரமரணமும் எடுத்துக் காட்டாக விளங்குகின்றது.

தனது நண்பன் ஒருவருடன் கப்டன் பாரத் - 9.12.1987 அன்று கொக்குவில் வீதி வழியாக சைக்கிளில் வந்து கொண் டிருந்தான். எதிர்பாராத விதமாக அந்த வழியில் இந்திய ஜவான்களைச் சந்திக்க வேண்டிய இக்கட்டான நிலை அவர்களுக்கு உருவானது. தன்னுடன் கூடவந்த நண்பன் சயனைட் குப்பியைக் கடிக்கப் போகிறான் என்பதைக் குறிப்பால் உணர்ந்து கொண்ட கப்டன் பரத் - திடீரென அவனிடமிருந்து குப்பியைப் பறித்துக் கடித்து வீரமரணத்தை தழுவிக் கொண்டான். தன் நண்பன் உயிரைக்காக்க தன்னுயிர் ஈந்த கப்டன் பாரத்தின் தியாகம் முன்னுதாரணமாயிற்று.

இதேபோல வவுனியாவில் இந்தியப் படைகளால் சிறை வைக்கப்பட்டிருந்த விடுதலைப் போராளிகளை விடுவிப்பதற்காக, 1.5.1989 அன்று ஒரு சிறையுடைபபை விடுதலைப் புலிகள் மேற் கொணடனர்.

இந்திய இராணுவத்துடன் ஏற்பட்ட கடும் மோதலின் பின் சிறை வைககப்பட்டிருந்த ஒவ்வொரு போராளியையும் விடுவித்த பின்னர் - இறுதியிலும் இறுதியாகச் சிறையிலிருந்து தான் தப்பிச் செல்லும்போது, விடுதலைப்புலி ஜெனா துப்பாக்கிச் சூடுபட்டு வீரமரணத்தை தழுவிக்கொணடான்.

விடுதலைப்போர் தொடரவேண்டும் என்பதற்காகவே போராளிகளைச் சிறை மீட்ட ஜெனாவின் தீரமும், வீரமரணமும் வரலாற்று நிகழ்வாகி விட்டது.

ஒரு போராளியின் வாழ்க்கை அவன் வாழும்போது மற்றவர்களுக்கு முன்னுதாரணமாகவும், அவன் மறைந்த பின்னர் அவனது தியாக வாழ்வு மற்றவர்கள் கற்றுக் கொள்ள வேண்டிய பாடவிதானமாகவும் அமைந்து விடுகின்றது. ◆

## தமிழீழ மாவீரர் எழுச்சி நாள் - 2004

01. பொதுச் சுடரேற்றல்.
02. தேசியக் கொடி ஏற்றல்.
03. ஈகச்சுடரேற்றல். (திருவுருவப படம்)
04. மலர்வணக்கம்.
05. அகவணக்கம்.
06. உறுதியுரை எடுத்தல்.
07. நினைவுரை.

என்பன வரிசை ஒழுங்கில் மேற்கொளளப்படும். ஆரமப நிகழவுகள மாவீரர் எழுச்சி நாட்களான மூன்று நாட்களிலும் நடைபெறும்.

### தேசியக் கொடியேற்றல்

மாவீரர் எழுச்சி நாட்களுக்கான நிகழ்வுகள் நவம்பர் 25 ஆம் திகதி காலை 8.00 மணிககு தேசியக் கொடியேற்றலுடன் ஆரம்பமாகும்.

மாவீரர் துயிலுமில்லங்களில் 25 ஆம் திகதி காலை 8.00 மணிக்கு ஏற்றப்படும். தேசியக்கொடி, நவம்பர் 27 ஆம் திகதி மாவீரர் நாள் நிகழ்வுகள் நிறை வடைந்த பின் இறக்கப்படும்.

இயக்கப் பணிமனைகள், தளங்களில் முதல் இரண்டு நாட்களிலும் - மாலை, 6.00 மணிக்கு கொடி இறக்கப்படடு, மறுநாட் காலை ஏற்றப்படும். நவம்பர் 27 ஆம் திகதி நாள் மாவீரர் நாள் நிகழ்வுகள் நிறை வடைந்த பின் இறக்கப்படும்.

பொது நிறுவனங்களிலும், பாடசாலைகளிலும், ஒவ்வொரு நாளும் பணி முடிந்த பின் - பகல் 12.01 பின்பாகவும், மாலை 6.00 மணிக்கு முன்பாகவும் தேசியக்கொடி இறக் கப்பட்டு மறுநாட காலையில் ஏற்றப்பட வேண்டும். தேசியக்கெடி ஏற்றுதல், இறக்குதல் தொடர்பான கூடுதலான விளக கங் கள் தேசியக்கொடி பயன்பாட்டு விதிககோவை என்னும் நூலில் கொடுக்கப்பட்டுள்ளது.

தமிழீழ மாவீரர் பணிமனை

செய்திக் கட்டுரை

கொ.அ.ஸ்ரனிஸ்லாஸ்

# இன்று புதுப்பொலிவுடன் திகழும் செம்பியன்பற்று உப அலுவலகம்



வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தின் மையப் பகுதியில் அமைந்திருந்த பருத்தித்துறை பிரதேசசபையின் செம்பியன் பற்று உப அலுவலகக் கட்டடம் - 2000 ஆம் ஆண்டு இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக சேதமாக்கப்பட்டதுடன், தளபாடங்களும் சேதமடைந்தன.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் செம்பியன்பற்றுக் கிராமத்தில் தனியார் வீட்டில் இயங்கிவந்த இந்த அலுவலகம் - தாளையடி, புதுக்காட்டு வீதியில் மூன்று லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட கட்டடத்தில் இன்று இயங்கவுள்ளது.

1928 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட செம்பியன்பற்று கிராமச்சங்கம் 9 வட்டாரங்களைக் கொண்டிருந்தது. இதன் முதல் தலைவராக - அச்சுவேலியைச் சேர்ந்தவரும், மருதங்கேணி கந்தசாமி கோயில் குருக்களுமாகிய குமாரசாமிக் குருக்கள் கடமையாற்றினார்.

இவரின் காலத்திலேயே கிராமச் சங்கக் கட்டடமும், மருதங்கேணிச் சந்தியில் பொதுச் சந்தைக் கட்டடமும், மீன் சந்தைக் கட்டடமும் 1933 ஆம் ஆண்டு கட்டப்பட்டன.

இவரைத் தொடர்ந்து ஆனந்தர் கணபதிப்பிள்ளை, ஆழியவளை மருதங்கேணி தெற்கைச் சேர்ந்த சி.முத்தையா, செம் பியன் பற்று தெற்கைச் சேர்ந்த இ.வே.நடராசா, வெற்றிலைக்கேணியைச் சேர்ந்த க.தம்பிஐயா, உடுத்துறை தெற்கைச் சேர்ந்த ஆ.ஐயமபிள்ளை, உடுத்துறை வடக்கைச் சேர்ந்த வைத்தியம் வேலுப்பிள்ளை (சிவகுரு) ஆகியோர் செம்பியன்பற்றுக் கிராமச்சங்கம் மற்றும் செம்பியன்பற்று கிராசபைத் தலைவர்களாக பதவி வகித்தனர்.

1928 ஆம் ஆண்டு தொடக்கம் 1987 ஆம் ஆண்டு வரை மாமுனை - தொடக்கம் ஆழியவளை வரையுமுள்ள கிரா மங்களில் வடக்கு - தெற்காக 9 வீதிகள் களிமண்ணால் அமைக்கப்பட்டு, பின்னர் கல்போட்டு தாரிடப்பட்டது.

பின்னர் மீன் பிடித்திணைக்கள நிதி உதவி பெற்று, மாமுனை - ஆழியவளை கடற்கரை வீதி அமைக்கப்பட்டது.

செம்பியன்பற்றுக் கிராம சபையின் 9 வட்டாரங்கள் - 1967 ஆம் ஆண்டில் 11 வட்டாரங்களாக அதிகரிக்கப்பட்டதுடன், ஆ.ஐயம்பிள்ளை தலைவராகக் கடமையாற்றிய காலத்தில், உள்ளூராட்சி அமைச்சின் நிதியுதவியுடன் - புதிதாக 1968 ஆம் அண்டு கட்டப்பட்ட கிராம சபைக் கட்டடத்தை, அப்போதைய உளளூராட்சி அமைச்சர் மு.திருச்செல்வம் திறந்து வைத்தார்.

1987 ஆம் ஆண்டு மாவட்ட அபி விருத்திச்சபை அமைக்கப்பட்டபோது, செம்பியன்பற்று கிராமசபை கலைக்கப்பட்டு, யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச் சபையின் உப அலுவலகமாக இயங்கி வந்ததுடன், 1988 ஆம் ஆண்டு பருத்தித்துறைப் பிரதேச சபையுடன் இணைக்கப்பட்டு, பருத்தித்துறை பிரதேச சபையின் செம்பியன்பற்று உபஅலுவலகமாக இயங்கிவருகிறது.

இந்தக் காலப்பகுதியில் பச்சிலைப் பள்ளி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட முள்ளிப்பற்றுக் கிராம சபையுடன் இணைந்திருந்த பெரிய பச்சிலைப்பள்ளி, முள்ளியான் போக்கறுப்பு, சுண்டிககுளம் ஆகிய நான்கு வட்டாரங்களும் பருத்தித்துறை தொகுதியுடன் இணைக்கப்பட்டு, பருத்தித்துறை பிரதேசசபையின் ஆளுகைக்கு உட்படுத்தப்பட்டன.

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் - முன்னைய புலோலி கிராம சபை, சுமார் 52 கிலோ மீற்றர் நீளமுடைய குடத்தனை - செம்பியன்பற்று கிராமசபை மற்றும் முள்ளிப்பற்றுக் கிராமசபையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட நான்கு வட்டாரங்களும் சேர்நத, ஒரு பாரிய நீளமான பிரதேசத்தை தனியொரு பிரதேசசபையால் அபிவிருத்தி செய்வது முடியாத காரியம்.

வடமராட்சி கிழக்கு பிரதேசத்துக்கு தனியான ஒரு பிரதேசசபை அமைவதன் மூலமே, 52 கிலோ மீற்றர் நீளமான பிரதேசத்தை அபிவிருத்தி செய்யமுடியும்.

பருத்தித்துறை பிரதேச சபையின் செம்பியன்பற்று உப அலுவலகம் மூலம், கீழ்க் காணும் கோரிக்கைகள் முழுமையாக நிறைவேற்றப்படுவதன் மூலம், இந்தப் பிரதேசம் அபிவிருத்தியடைய முடியும்.

அவையாவன -

**செம்பியன்பற்று உப அலுவலகம்**

புதிதாகப் புனரமைக்கப்பட்ட உப அலுவலகத்துக்குத் தேவையான தளபாடங்கள் வழங்கப்படுவதுடன். போதுமான ஆளணியினர் நியமிக்கப்பட வேண்டும்.

இந்தப் பிரதேச அபிவிருத்தித் திட்டங்கள் - இந்த உப அலுவலகத்தின் மூலம் தயாரிக்கப்பட்டு, பிரதேசசபை மூலம் நிறைவேற்றப்பட வேணடும்.

இந்தப் பிரதேச மக்கள், பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் தங்கள் தேவைகளின் பொருட்டு - பருத்தித்துறை பிரதேச சபைக்குச் சென்று வருவதைத் தவிர்த்து, உப அலுவலகத்திலேயே செய்யக் கூடியதான ஒழுங்குகளைச் செய்தல்.

**மருதங்கேணி பொதுச்சந்தை -**

சந்தையில் அமைந்திருந்த சந்தைக் கட்டடங்கள், கடைத் தொகுதிகள் கடந்த கால இராணுவ நடவடிக்கைகளால் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன. இந்தப் பிரதேச மக்கள் மறும் மாசார், சோறன்பற்று, முகாவில், இயக்கச்சி கிராம மக்கள் தமது விளை பொருட்களை விற்பனை செய்யுமிடமாகவும், மக்கள் தமக்குத் தேவையான மரக்கறி கொள்வனவு செய்யும் ஒரேயொரு பொதுச் சந்தையாக கடந்த காலங்களில் இருந்துள்ளது.

(தொடரும்)

# அவுஸ்ரேலிய தூதரக குண்டுவெடிப்பு
# சந்தேக நபர்கள் நால்வர் கைதாகினர்



இந்தோனேஷியாவில் உள்ள அவுஸ்ரேலியத் தூதரகம் மீது கடந்த செம்ரெம்பர் மாதம் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலுடன் தொடர்புடையவர் எனத் தெரிவித்து நான்கு சந்தேகநபர்களை பொலிஸார் கைதுசெய்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவர் தாக்குதலை திட்டமிட்டவரெனவும், மற்றொருவர் தாக்குதலுக்கான குண்டைத் தயாரித்தவரெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களின் கைது அவுஸ்ரேலிய தூதரகம் மீதான குண்டுவெடிப்பு விசாரணையில் மிகப்பெரிய திருப்பத்தை ஏற்படுத்துமென செய்திகள் தெரிவிக்கின்றன.

கைது செய்யப்பட்ட நால்வரும் சோஜிர் (மாற்றுப் பெயர் அன்சோரி), றொயிஸ் (மாற்றுப்பெயர் இவான் டோம் வான்), ஹசன் மற்றும் அபூய் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நால்வரும் இந்தோனேஷிய தலைநகரிலிருந்து 60 கி.மீற்றர் தொலைவிலுள்ள மேற்கு ஜவான் நகரப் பகுதியில் வைத்து அமெரிக்கப் படைகளால் பயிற்றப்பட்ட பயங்கரவாதத்திற்கெதிரான இந்தோனேஷிய விசேட பொலிஸ் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்டவேளை இந்த நால்வரும் தமது இடுப்பு பகுதியில் குண்டு நிரப்பிய பைகளைக் கட்டியிருந்ததாகவும், தேவையேற்படும்வேளை, இதனை வெடிக்கச் செய்வதற்கு தயாராக இருந்த போதிலும் அதனை அவர்கள் மேற்கொள்ளவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் இவர்களைக் கைது செய்தவுடன், இவர்கள் தொடர்பாக உடனடியாக தெரிவிக்காமைக்கு காரணம் - இவர்களுடன் தொடர்புடையவர்கள் வேறு பகுதிகளுக்கு சென்று விடுவார்கள் என்ற காரணத்தாலேயே எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.



இவர்களைவிட மலேசியாவைச் சேர்ந்த இஸ்லாமிய கிளர்ச்சிவாதிகளான அசார் குசின் மற்றும் நூர்தீன் மொகமட் என்ற இருவரையும் பொலிஸார் தேடிவருகின்றனர். இவர்களும் அவுஸ்ரேலிய தூதரக தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் எனபதுடன் 2002 ஆம் ஆண்டு பாலித்தீவில் இடம்பெற்ற குண்டு வெடிப்புடன் தொடர்புடையவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இந்த நால்வரும் கைது செய்யப்பட்டமையை அவுஸரேலிய வெளிவிவகார அமைச்சர் அலெக்சான்டர் டௌன்னர் வரவேற்றுள்ளார்.

# போர்க்குற்றவாளிகளை கைதுசெய்ய
# சேர்பிய அரசாங்கம் தவறிவிட்டது!
## சர்வதேச நீதிமன்றம் குற்றச்சாட்டு



சேர்பிய-பொஸ்னிய யுத்தத்தின் போது பல்லாயிரக்கணக்கான முஸ்லிம்கள் கொல்லப்படுவதற்கு காரணமாக இருந்த றடோன் கார்டிச் மற்றும் றற்கோ மல்டிக் ஆகியோர் தற்பொழுது சேர்பியாவில் சுதந்திரமாக நடமாடுவதாகத் தெரிவித்துள்ள சர்வதேச போர்க்குற்றவியல் நீதிமன்றம், இவர்களைக் கைதுசெய்ய ஷேர்பிய அரசு தவறிவிட்டதாகவும் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே றற்கோ மட்டிக் மீது சேர்பெனிக்ஸ் படுகொலைகள் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

சர்வதேச போர்க்குற்றவாளிகள் 12 பேர் சேர்பியாவில் சுதந்திரமாக வாழ்வதாக சர்வதேச போர்க்குற்றவியல் நீதிமன்றம் ஐக்கிய நாடுகள் சபையிடம் முறைப்பாடு செய்துள்ளது.

சர்வதேச போர்க்குற்றங்கள் தொடர்பாக தேடப்பட்டுவரும் குற்றவாளிகள் பலர் சேர்பியாவில் சுதந்தர்மாக வாழ்கின்றபோது சேர்பிய அரசாங்கம் வேண்டுமென்றே அவர்களைக் கைதுசெய்யாமல் இருப்பதாக சர்வதேச போர்க்குற்றவியல் நீதிமன்றில் சட்டத்தரணி கரப்டெல் பொனேற் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக சர்வதேச சமூகம் மௌனமாக இருப்பதால் மிகமோசமான குற்றவாளிகள் பலர் தண்டனைகளிலிருந்து தப்பிவிடுவதாக கரப்டெல் பொனெற் தெரிவித்தார்.

யூகோஸ்லாவியாவில் படுகொலைகள் தொடர்பாக 1993 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சர்வதேச போர்க்குற்றவியல் நீதிமன்றம் இதுவரையில் 36 போர்க் குற்றவாளிகளை விசாரணை செய்துள்ளது.

# இஸ்ரேல் முன்னாள் ராணுவத் தளபதி
# நீரில் மூழ்கி மரணமடைந்தார்!



இஸ்ரேலின் முன்னாள் இராணுவத்தளபதியான ரப்கேல் ஈதன் (வயது 75) கடலுக்கு நீந்தச் சென்றவேளை நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

உயிரிழந்த ஈதன் சூமெற் தேசியவாத கட்சியின் தலைவராவார். அத்துடன் இவர் உயிரிழக்கும்வரை துறைமுகங்கள் மீள் புனரமைப்பு திட்டத்தில் கடமையாற்றி வந்துளளார்.

கடலுக்குள் நீந்தச் சென்ற இவர் கொந்தளிப்பான கடற்பகுதிக்குள் நீண்ட நேரம் அகப்பட்டதனாலேயே இந்த உயிரிழப்பு நேர்ந்ததாக இஸ்ரேல் வானொலி தெரிவித்தது. இவரது சடலம் தற்போது கடற்பகுதியிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

இவரது உயிரிழப்பு தொடர்பான சரியான தகவல் வெளிவராத நிலையில், இந்த உயிரிழப்புத் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு இஸ்ரேலிய போக்குவரத்துத் துறை அமைச்சரான மீர் சீற்றின் தெரிவித்தார்.

உயிரிழந்த ஈதன் 37 வருடங்கள் இஸ்ரேல் இராணுவத்தில் பணியாற்றியுள்ளார். அத்துடன் 1978 முதல் 1983 வரை இஸ்ரேலிய இராணுவத் தளபதியாகவும் பதவிவகித்துள்ளார்.

இவர் 1948ஆம் ஆண்டு இஸ்ரேல் நாடு உருவான பின்னர் வந்த போர்களான - 1956 ஆம் ஆண்டு சினாய் யுத்தம், 1967 ஆம் ஆண்டு ஆறு நாள் யுத்தம், 1973 ஆம் ஆண்டு நடைபெற்ற யொம் இப்பூர் யுத்தம் ஆகியவற்றில் பங்குகொண்டுள்ளார்.

இராணுவத்திலிருந்து விலகிய பின்னர் இவர் சூமெற் கட்சியை அமைத்தார். தற்போது பிரதமர் ஏரியல் ஷரோனின் லிக்குயிட் கட்சிகளுடன் தற்போது அரசாங்கத்தில் பங்காளிக் கட்சியாகவுள்ளார். இவர் 1990ஆம் ஆண்டு இஸ்ரேலிய விவசாய மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சராகவும் இருந்துள்ளார்.

அத்துடன் சமாதானப் பேச்சுக்கள் மூலம் பலஸ்தீனர்களுக்கு நிலத்தை வழக்குவதனையும் இவர் எதிர்த்து வந்துள்ளார்.

அத்துடன், சமாதானப் பேச்சுக்கள் மூலம் பலஸ்தீனர்களுக்கு நிலத்தை வழங்குவதனையும் இவர் எதிர்த்து வந்துள்ளார்.

## எதிர்க் கட்சி ஆதரவாளர்களின் ஆர்ப்பாட்டத்தையடுத்து
# உக்ரைனின் சகல அரசியற்கட்சிகளையும் பேச்சுக்கு வருமாறு ஜனாதிபதி அழைப்பு



உக்ரைன் தேர்தல் முடிவுகளை எதிர்த்து எதிர்க்கட்சி வேட்பாளர் யஷ்சென் கோவின் ஆதரவாளர்கள் நடத்திவரும் ஆர்ப்பாட்டத்தை முடிவுக்கு கொண்டுவந்து, அங்கு இயல்பு நிலையை ஏற்படுத்த உக்ரைன் ஜனாதிபதி சகல கட்சிக்ளையும் பேச்சுவார்த்தைக்கு அழைத்துள்ளார்.

ஆனாலும், நேற்றும் மூன்றாவது நாளாக எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் தலைநகரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனிடையே எதிர்க்கட்சி வேட்பாளர் யஷ்சென்கோ, தனது எதிராளியான பிரதமர் விக்ர் யனுகோவிசசுடன் எவ்வித பேச்சுவார்த்தையையும் நடத்தமாட்டாரென - யஷ்சென்கோவின் உதவியாளரான மைகோலா ரொமென்கோ தெரிவித்தார்.

ஜனாதிபதி குச்மா சகல கட்சிகளையும் பேச்சுக்கு அழைத்துள்ள போதிலும், இந்தப் பேச்சுவார்த்தை எங்கே நடைபெறவுள்ளதென்பது தெளிவாகத் தெரியவில்லையென செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனிடையே, தற்போதைய பிரச்சினைகளுக்கு உக்ரைன் ஜனாதிபதி குச்மா ஒருவராலேயே தீர்வு காணமுடியுமென எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது. ஆனாலும் தற்போதைய



பிரச்சினைகளுக்கு நடந்து முடிந்த தேர்தலை முறையற்றதென அறிவித்து, எதிர்க்கட்சி வேட்பாளரை ஜனாதிபதி பதவிக்கு சிபார்சு செய்வதுதான் ஒரே வழியென செய்தியாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, நேற்றுமுன்தினம்



உக்ரைன் நாடாளுமன்றில் இடம்பெற்ற காரசாரமான விவாதத்தை அடுத்து எதிர்க்கட்சி வேட்பாளர் யஷ்சென்கோ மாதிரி பைபிள் ஒன்றினை வைத்து தானே ஜனாதிபதி வேட்பாளரென சத்தியப் பிரமாணம் செய்துள்ளார்.

இவரது இந்த உரை நாடாளுமன்றிலுள்ள ஒலிபெருக்கி மூலம் வெளியே ஒலிபரப்பப்பட்டது. இவரது இந்த சத்தியப்பிரமாணத்தைக் கேட்பதற்காக சுமார் 2 லட்சம் எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் நாடாளுமன்றுக்கு வெளியே நின்றிருந்தனர்.

ஆனால் இவரது இச்செயலை உக்ரைன் ஜனாதிபதி வன்மையாகக் கண்டித்துள்ளார்.

# அமெரிக்க அதிபர் புஷ்ஷின் பாதுகாவலரை
# சிலி நாட்டு பொலிஸார் தடுத்துநிறுத்தினர்!



சிலி நாட்டுக்குச் சென்ற அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷின் பாதுகாவலரை அந்த நாட்டுப் பொலிஸார் தடுத்து நிறுத்தினர்.

இதைப் பார்த்த புஷ் பொலிஸாரிடம் சென்று சண்டையிட்டு பாதுகாவலரை மீட்டார். இந்தச் சம்பவம் அந்த நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தென் அமெரிக்காவில் உள்ளது சிலி நாடு. இங்கு ஆசிய -பசுபிக் பொருளாதார கூட்டுறவு மாநாடு நடைபெற்றது. இதில் அமெரிக்கா உட்பட 20 நாடுகளின் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

மாநாடு பகலில் முடிந்ததும் இரவு விருந்து நடந்தது. இதற்கு ஜனாதிபதி புஷ் வந்தபோது அவருடன் பாதுகாவலர்களும் வந்தனர். ஒரு பாதுகாவலரை மட்டும் அனுமதித்த சிலி பொலிஸார், இன்னொரு பாதுகாவலரை தடுத்து நிறுத்திவிட்டனர்.

சிறிது தூரம் சென்ற பின்னர் இதனைக் கவனித்த புஷ், பொலிஸாரிடம் சென்று சண்டையிட்டு தன் பாதுகாவலரை மீட்டார். புஷ்ஷின் பாதுகாவலர் விதிமுறைகளை மீறி செயற்பட முயன்றதாக சிலியின் வெளிநாட்டு அமைசசர் இக்னசி யோவாக்கர் குறை கூறினார்.

இந்த நிலையில் அடுத்த நாள் சிலி ஜனாதிபதி லாகோஸ் சார்பில் புஷ்ஷிற்கு கொடுக்கப்படவிருந்த விருந்து ரத்துச்செய்யப்பட்டது.

அமெரிக்க அதிகாரிகள் பாதுகாப்பு முன்னேற்பாடுகளில் குறைகளைக் கண்டதால் விருந்து ரத்து செய்யப்பட்டதாக சிலி அதிகாரிகள் கூறினர்.

விருந்துக்காக ஜனாதிபதி மாளிகைக்கு வரும் சிலிநாட்டு ஜனாதிபதியின் விருந்தினர்கள் மெட்டல் டிடெக்டர் மூலம்தான் நுழைய வேண்டும் என்று அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள் நிர்ப்பந்தித்தனர். இதற்கு சிலி ஜனாதிபதி லாகோஸ் சம்மதிக்கவில்லை. இதுவும் விருந்து ரத்தானதற்கு காரணமாக கூறப்படுகிறது.

புஷ்ஷின் நடத்தைக்கு சிலி நாட்டு மக்கள் கண்டனம் தெரிவித்தனர். புஷ்சிடம் அவரது நடத்தை பற்றியும், விருந்து ரத்து பற்றியும் நிருபர்கள் கேள்வி கேட்டபோது புஷ் கோபம் அடைந்தார்.

சிலி நாட்டுப் பயணம் வெற்றிகரமாக இருந்ததாகவும் சிலிநாட்டினர் எங்களை நன்றாக உபசரித்தனர் என்றும் புஷ் கூறினார்.

## உலக நோக்கு

# 11 மாத குழந்தையின் கைகளை வெட்டிய தாய்

(வொஷிங்ரன்)

அமெரிக்காவில் டெக்சாஸ் மாநில தலைநகர் டல்லாஸ்சில் வசிப்பவர் டெனாஷ் லோசர். 35 வயதான இவர் கணவன், மூன்று மகள்களுடன் வசிக்கிறார்.

இவர் தனது 11 வயது மகளின் இரண்டு கைகளையும் வெட்டி எறிந்துவிட்டார். பின்னர் அவரே பொலிஸாருக்கும் தொலைபேசி மூலம் தெரிவித்தார்.

பொலிஸார் அவர் வீட்டுக்கு விரைந்தபோது டெனாஷும் அவரது 11 மாதக் குழந்தையும் மட்டுமே வீட்டில் இருந்தனர். குழந்தையின் கைகள் வெட்டப்பட்டதால் ரத்தம் சொட்டச்சொட்ட கிடந்த குழந்தையை பொலிஸார் வைத்தியசாலையில் சேர்த்தனர்.

பின்னர் பொலிஸார் டெனாஷைக் கைது செய்தனர். மனநிலை பாதிக்கப்பட்டதால் டெனா இந்தச் செயலை செய்து இருக்காலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இதனால் அவருக்கு மனோதத்துவ சிகிச்சை அளிக்க பொலிஸார் முடிவுசெய்தனர். இதற்கு அவரும் சம்மதித்தார். இது தொடர்பான வழக்கில் டெனாஷ் மீதான குற்றம் நிரூபணமானால் அவருக்கு மரண தண்டனை கிடைக்கும்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ஜயந்த தனபால நேற்று வவுனியாவிற்கு விஜயம்



அரசாங்க சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால நேற்று வவுனியாவிற்கு விஜயம் செய்து - மாவட்ட அரசாங்க அதிபர், படை அதிகாரிகள் போர்நிறுத்த கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

நேற்றுக்காலை 9.30 மணியளவில் வவுனியாவுக்கு விஜயம் செய்த ஜயந்த தனபால - வவுனியா ஜோசெப் இராணுவமுகாமில் படைத தளபதிகள்மற்றும் உயர் அதிகாரிகளைச் சந்தித்து பேச்சு நடத்தினார். 11 மணியளவில் இவர் வவுனியா மாவட்ட அரச அதிபர் கே.கணேசை சந்தித்துக் கலந்துரையாடிய பின்னர் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு பிரதிநிதிகளை அவர்களது அலுவலகத்திற்குச் சென்று சந்தித்தார்.இதன் பின்னர் 11.45 மணியளவில் ஓமந்தை சோதனைச் சாவடிக்குச் சென்றார்.

அங்கு வன்னி இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பரமி குலதுங்க, கேணல் ராஜகுரு உள்ளிட்ட உயர் அதிகாரிகள் மற்றும் படையினருடன் கலந்துரையாடல்களை நடத்தினார்.

அடுத்து ஏ 9 பாதையூடாக பயணம் செய்த பொதுமக்களைச் சந்தித்த அவர் அவர்களது பயணங்கள் தொடர்பான குறை நிறைகளைக் கேட்டறிந்தார்.

இதன் பின்னர் நேற்று மாலை 4.00 மணியளவில் வவுனியா மாவட்டத்திலுள்ள சில தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளை சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போது நாட்டில் மீண்டும் யுத்தம் ஏற்படாதெனவும், ஜனாதிபதியும் அரசாங்கமும் சமாதானத்தை முன்னெடுக்கவே உறுதியாகவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.இந்தச் சந்திப்பில் தொண்டர் அமைப்பு பிரதிநிதிகள் ஜயந்த தனபாலவிடம், உயர்பாதுகாப்பு வலயத்தால் மக்கள் பெருமளவு இன்னல்களுக்கு ஆளாகின்றனர். எனவே, இவை நீக்கப்படவேண்டும். எனத் தெரிவித்தனர்.

இதனையடுத்து ஜயந்த தனபால வவுனியாவிலுள்ள ஊடகவியலாளர்களைச் சந்தித்தார். இதன்போது தனது அண்மைக்கால கிழக்கு மாகாண விஜயத்தின் அடிப்படையிலேயே நேற்றைய தனது வவுனியா விஜயம் அமைந்ததாகத் தெரிவித்தார். அத்துடன் இன்றையதினம் மன்னாருக்குச் செல்லவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (03)

சேனாதி கொலையுடன் தொடர்புடைய

# கருணா குழு உறுப்பினரே பொலநறுவையில் பலி!

(கொழும்பு)

பொலநறுவையில் கடந்த 18 ஆம் திகதி இராணுவப் புலனாய்வுப் பிரிவு அதிகாரியுடன் சென்று கொண்டிருந்தபோது சுட்டுக்கொல்லப்பட்ட இராசநாயகம் பிரபாகரன் என்ற கருணா குழு உறுப்பினர், லெப்.கேணல் சேனாதி உள்ளிட்ட போராளிகளின் படுகொலைகளுடன் நேரடியாகத் தொடர்புபட்டவரென இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பொலநறுவையில் கருணா குழுவைச் சேர்ந்த இராசநாயகம் பிரபாகரன் மீதான இலக்கிலேயே இராணுவ புலனாய்வுத் துறையைச் சேர்ந்த லான்ஸ் கோப்ரல் அஜித் தசநாயக்காவும் கொல்லப்பட்டார்.

கொல்லப்பட்ட இராசநாயகம் பிரபாகரன் என்பவர் குகனேசன் உட்பட எண்மர் கொல்லப்பட்ட கொட்டாவ வீட்டில் அவர்களுடன் கூடவே தங்கியிருந்தவர் என்ற போதிலும், கொட்டாவ வீடு தாக்கப்பட்ட சமயம் அங்கிருக்காததால் உயிர் தப்பியிருந்தார்.

இதன் பின்னர் பொலநறுவையில் தங்கியிருந்து கருணாவின் நெருங்கிய சகபாடியான பிள்ளையானுக்கு நம்பிக்கைக்குரியவராக செயற்பட்டு அவர்களின் தேவைகளை கவனித்தல், இராணுவப் புலனாய்வுப் பிரிவினருடனான தொடர்புகளைப் பேணுதல் போன்ற வேலைகளைச் செய்துவந்தார்.

அத்துடன், மேற்படி நபர் மட்டக்களப்பு நகர அரசியற்துறைப் பொறுப்பாளர் சேனாதி மற்றும் கறுவாக்கேணியில் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் மீதான தாக்குதல்களில் நேரடியாகத் தொடர்புபட்டவர்.

இவர்மீது துப்பாக்கிதாரிகள் இலக்கு வைத்தபோதே அவருடன் பயணித்த இராணுவப் புலனாய்வுப் பிரிவு அதிகாரியான லான்ஸ் கோப்ரல் தஸநாயக்கா என்பவரும் கொல்லப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

ஆறுமணிநேர பட்ஜெட் உரையில்

# சமாதான முயற்சிகள் குறித்து ஒரு வார்த்தையும் இல்லை!

## ரவிராஜ் எம்.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் வரவு -செலவுத்திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து ஆறு மணித்தியாலங்களாக உரையாற்றிய நிதியமைச்சர் சரத் அமுனுகம சமாதானம் தொடர்பாக எந்த ஒரு கருத்தையும் தெரிவிக்கவில்லை.

இந்த நிலையில் முன்னறிவித்தலின்றி இலங்கைக்கு சுமார் 90 மில்லியன் ரூபா பெறுமதியான இராணுவ உபகரணங்களை பாகிஸ்தான் அரசு வழங்கியுள்ளதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வரவு செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய அவர், பாகிஸ்தான் இலங்கைக்கு ஆயுதங்களை வழங்கியதன் மூலம், இலங்கையில் யுத்தம் ஒன்று ஏற்படுமானால் யாழ்ப்பாணத்தில் வாழும் முஸ்லிம் மக்களும் பலியாவர் என்பதை பாகிஸ்தான் அறிந்திருக்க வேண்டியது அவசியம்.

யுத்தம் ஒன்றை மேற்கொள்ளும் வகையில் ஜனாதிபதி பல்வேறு நாடுகளுடன் ஆயுதங்களை கொள்வனவு செய்யும் ஒப்பந்தங்களை மேற்கொண்டு வருகிறார். வரவு செலவுத் திட்டத்தின் மூலம் அபராதத் தொகைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதைப் போன்று கட்சி மாறும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அபராதத்தொகைகள் அறிவிடப்பட வேண்டும்.

தமிழ் பேசுகின்ற சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் அண்மைக் காலமாக பெரும்பான்மையினரிடம் இருந்து சில சலுகைகளைப் பெற்றுக்கொள்வதற்காக அரசாங்கத்துடன் இணைந்து கொண்டதன் மூலம், அரசாங்கத்தின், தமிழர்களுக்கு எதிரான நாசவேலைகளுக்கு துணைபோயுள்ளனர்

வரவு - செலவுத்திட்டத்தில் பௌத்த மதத்திற்கு 100 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது எனினும் இந்து இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவ மதங்களுக்கு எவ்வித ஒதுக்கீடுகளும் செய்யப்படவில்லை

நாட்டில் சமாதான முன்னெடுப்புகளை மேற்கொள்ளாமல், அரசாங்கம் எதிர்பார்க்கும் எந்த ஒரு அபிவிருத்தியையும் அடைய முடியாது.

32 பேர் மாத்திரமே அமைச்சர்களாக இருக்கவேண்டும் என வலியுறுத்திய ஜே வி.பி இன்று அமைச்சர்களின் தொகை 84 ஆக உயர்ந்துள்ளமையை கண்டுகொள்ளவில்லை

இதேவேளை அரசாங்கம், ஈழ மக்கள் ஜனநாயக கட்சியான ஈ.பி.டி.பிக்கு அரச வானொலியில் ஒரு மணித்தியாலம் ஒதுக்கியுள்ளமை ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல.

பண்டாரநாயக்க ஆரம்பித்து வைத்த இனப்பிரச்சினையை அவரின் மனைவி தொடர்ந்துகொண்டு சென்று பின்னர் அதனை மகளும் தொடர்ந்துக்கொண்டிருக்கிறார் எதிர்காலத்தில் பண்டாரநாயக்கவின் புத்திரரும் இதனை தொடருவதற்கு முயற்சித்துக் கொண்டிருப்பதாகவும் ரவிராஜ் குற்றம் சுமத்தினார். (01)

### வாழைச்....

படும் வழியில் மரணமடைந்தார்.

வீடுகளிலிருந்து அழைத்துச் செல்லப்பட்ட இவர்கள் ரி -56 ரக துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இருவரது சடலங்களும் தற்போது செங்கலடி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

இது குறித்து ஏறாவூர் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

இராணுவப் பின்னணியுடன் இயங்கும் ஆயுதக்குழுவே இந்தக் கொலைகளுக்குக் காரணம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### மாவீரர்...

துவ முகாம்கள், வறிய மக்களுக்குவுதல், பாடசாலை மாணவர்களுக்கு சீருடைகள் வழங்கப்பட்டும் வருகிறது.

இதேவேளை கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை திருகோணமலை மாவட்டங்களிலும் வீதிகளில் சிவப்பு மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டும் அலங்கார வளைவுகளும் பதாகைகளும் கட்டப்பட்டுள்ளதுடன் மாவீரர்களின் பெற்றோர்களும் கௌரவிக்கப்பட்டும் வருகின்றனர்.

### பெற்றோர் கௌரவிப்பு

தெல்லிப்பளை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் தமது எல்லைக்குட்பட்ட மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று பிற்பகல் 3 மணிக்கு சங்கத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின் தலைவர் சி.சிவமகாராசா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள், கூட்டுறவாளர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வின்போது மாவீரர்களின் பெற்றோர்களுக்கு மாவீரர்களின் நினைவாக அன்பளிப்பு பொருட்களும் வழங்கப்படவுள்ளது.

### தேசியக்...

திலும் ஏற்றப்பட்ட தேசியக் கொடியினையும் படையினர் பலவந்தமாக அகற்றியதனாலேயே மக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இரண்டு தேசியக் கொடிகளையும் படையினர் மீளத் திருப்பித்தர வேண்டுமெனக்கோரி வர்த்தக நிலையங்கள் யாவும் பூட்டப்பட்டு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதனை அடுத்து மன்னார் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இனியவன் இது தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் முறையிட்டார். இதன் பின்னர் கண்காணிப்புக்குழுவினர் சம்பவ இடத்திற்குச் சென்று நிலைமைகளை அவதானித்தனர்.

அடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், வினோநோகராதலிங்கம், மன்னார் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இனியவன், மன்னார் மாவட்ட படை அதிகாரி பிரிகேடியர் சரத்பெர்னாண்டோ ஆகியோர் கலந்து கொண்ட அவசர கூட்டமொன்று போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் இடம்பெற்றது.

இனிவரும் நிகழ்வுகளில் புலிக்கொடி ஏற்றுவது தொடர்பாக அரசாங்கத்தினதும் விடுதலைப்புலிகளினதும் தெளிவான நிலைப்பாட்டைத் தமது தலைமை அலுவலகத்தினூடாக அறிந்து இன்று காலை 10.00மணிக்கு அறிவிப்பதாகத் தெரிவித்த கண்காணிப்புக்குழுவினர் அனைவரையும் அமைதியாக இருக்குமாறும் கேட்டுக் கொண்டனர்.

இதன்பின்னர் படையினரால் எடுத்துச்செல்லப்பட்ட இரண்டு தேசியக் கொடிகளும் ஒப்படைக்கப்பட்டதை அடுத்து நிலமை சுமுக நிலைக்கு கொண்டுவரப்பட்டது.

# வேட்டைத் துப்பாக்கியுடன் கிளாலியில் ஒருவர் கைது

கிளாலிப் பகுதியில் உள்ளூர் தயாரிப்பான துப்பாக்கியுடன் வன்னிப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

மல்லாவி - யோகபுரத்தைச் சேர்ந்த ரி.நம்பிராசா என்பவரே உள்ளூர் தயாரிப்பான வேட்டைத் துப்பாக்கியுடன் படையினரால் கைதுசெய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வீதிரோந்தில் ஈடுபட்டிருந்த படையினரால் கைதுசெய்யப்பட்ட இவர் கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டார்.

இவரை சாவகச்சேரி நீதிவான் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

### போர்நிறுத்தம்

சந்தர்ப்பத்தில், அதாவது எதிர்பார்க்கப்பட்ட வருமானம் எதிர்காலத்தில் கிடைக்காமல் போகுமாக இருந்தால் வரவு - செலவுத்திட்ட துண்டு விழும் தொகையை எவ்வாறு நிரப்புவது.

அத்துடன் பொருளாதார மறுசீரமைப்புக்கொள்கை எதனையும் வரவு செலவுத்திட்டம் மூலம் இந்த அரசாங்கம் வெளியிடவில்லை. அடுத்த வருடத்திற்கான இந்த வரவு செலவுத்திட்டத்தில் அதிகளவு வரிவிதிப்பு எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், வரிவிதிப்பு எதனையும் அரசாங்கம் மேற்கொள்ளாத காரணத்தால் அது வரவு செலவுத் திட்டத்திற்கான பற்றாக்குறைக்கு மேலதிகமாக கடன்களைப் பெற வேண்டியிருக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### பவுஸர் மோதி வயோதிபர் காயம்

மல்லாகம் சந்திக்கு சமீபமாக பவுசர் மோதியதில் முதியவர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முற்பகல் 11 மணிக்கு இடம்பெற்ற இந்த விபத்தில் கனகரத்தினம் (வயது 65) என்பவரே படுகாயமடைந்தவராவார். சைக்கிளில் சென்றுகொண்டிருந்த மேற்படி வயோதிபரை பின்புறமாக வந்த பவுஸர் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றதாகத் தெரியவருகிறது.

### நோர்வே

இவர்கள் சமாதானப் பேச்சில் அனுசரணையாளராக உள்ள நோர்வே, விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்பட்டுவருவதாகக் குற்றம் சாட்டியுள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் பௌத்த பிக்குகள், ஜே.வி.பியின் அரசியல்வாதிகள், ஈ.பி.டி.பியினர் ஆகியோர் கலந்துகொண்டதாகத் தெரியவருகிறது.

### சமாதான முயற்சிகளைத்...

இதன்போது - சமாதான முயற்சிகளை முன்னகர்த்துவதற்கு புலிகளால் தெரிவிக்கப்பட்ட யோசனைக்கு அரச தரப்பு இதுவரை பதிலளிக்காத நிலையில் நாட்டில் மீண்டும் யுத்தம் ஏற்படுமோ என்ற பீதி தோன்றியிருக்கிறது.

இந்தச் சூழ்நிலையிலேயே அரசாங்க மற்றும் விடுதலைப்புலிகள் தரப்புகளுக்கு இடையிலான முரண்பாடுகளைக் களைந்து - சமாதான முன்னெடுப்புகள் குறித்து ஆராய்வதற்காக எரிக் சொல்ஹெய்ம் மீண்டும் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

அடுத்த மாதம் இலங்கைக்கு வரவுள்ள எரிக் சொல்ஹெய்ம் - எப்போது இங்கு வருவார் என்றோ எத்தனை நாட்கள் இங்கு தங்கியிருப்பார் என்றோ எந்தத் தகவலும் வெளியாகவில்லை. இலங்கைக்கு வரும் சொல்ஹெய்ம் ஜனாதிபதி சந்திரிகா மற்றும் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனையும் சந்திக்கத் திட்டமிட்டுள்ளார்.

## மரண அறிவித்தல்

### செல்லையா பரமநாதன்

(தாதிய உத்தியோகத்தர், அரசினர் வைத்தியசாலை, சங்கானை)

காளையடி பண்டத்தரிப்பைச் சேர்ந்த செல்லையா பரமநாதன் 20.11.2004 இல் இயற்கை மரணம் அடைந்துவிட்டார்.

அன்னாரின் பூதவுடல் 25.11.2004 வியாழக்கிழமை சம்பில்துறை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
மனைவி, மக்கள்.

காளையடி பண்டத்தரிப்பு. (இ)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 25.11.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.